7-OCT 1940

# வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.
பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

2 ⊕ September 1940. ⊕ No. 10

விஷய சூசிகை. பக்கம்


| | |
|---|---|
| ரஸாயனம் அல்லது காயகல்பம். (பத்திராதிபர்) | 1—12 |
| சித்தர் முறை<br>பண்டிட் நாராயணய்யங்கார் | 13—20 |
| வைத்தியர்களுக்கு ஓர் வேண்டுகோள்<br>திருச்சி ஆயுர்வேதாசார்ய<br>V. B. நடராஜ சாஸ்திரிகள் அவர்கள் | 21—23 |
| உதும்பரம்—அத்தி<br>திருச்சி ஆயுர்வேதாசார்ய<br>V. B. நடராஜ சாஸ்திரிகள் அவர்கள் | 24—29 |
| வானஸ்பத்யமும் வநஸ்பதியும்<br>பத்திராதிபர் | 29—31 |
| வசம்பு—பத்திராதிபர் | 32 |



| சந்தா விகிதம். | விளம்பர விகிதம். |
|---|---|
| வருஷ சந்தா:— | மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8 |
| உள்நாட்டுக்கு ரூ. 2 | ,, ,, ½-க்கு ரூ 4 |
| வெளிநாட்டுக்கு ரூ. 3 | ,, ,, ¼-க்கு ரூ 2 |

கிடைக்குமிடம்:—
Pandit, S. NARAYANA IYENGAR.
Editor and Publisher
No. 2, Police Station West Lane, Madura.

வெங்கடேஸ்வர் பிரஸ், மதுரை:—40.

[விலை 0—3—0

3L
L:5mm211/N125VC
N40.2.10.
210188.

குழந்தைகளுடைய ஆரோக்யம் முதலியவை
களுக்கு இன்றியமையாத

# ப ய ஸ் ய ா

ஆயுர்வேதாசார்ய V. B. நடராஜ சாஸ்திரிகள் அவர்களால் ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப் பட்டது.

**பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு அவசிய மானதோர் சிறந்த ரஸாயனம்.**

இது தாய்ப்பாலின் அளவையும், ஜீவ ஸத்துக்களை மிகுதியாக விருத்தி செய்வதுடன் குழந்தைகளுச் புஷ்டி, பலம், ஆரோக்கியம் முதலியவைகளையும் பூர்ண அளிக்கிறது. உபயோகிக்கும் விதம் முதலியவை யனத்துடன் அனுப்பப்படும். விலை ரூபாய் 2-4-0 தான
தபால் செலவு வேறு

கிடைக்குமிடம்:—

**ஆத்ரேய ஆயுர்வேத ஒர்க்ஸ்,**
தென்னூர் ரோடு, திருச்சிராப்பள்ளி.

## IND ANODYNE

**(Haemostatic and Antiseptic).**

The new Ayurvedic substitute for Tr. Iodine. Used with marvellous effects for bleeding wounds, cuts, abrasions, inflammations and septic ulcers.

Becomming very popular.

Sold every-where in bottles of 16 oz., 8 oz., 4 oz., 2 oz., 1 oz.

Prices. Rs. 1-14 Rs. 1/-8 Ans. 4/- As. 0-2-3.

Stockists wanted everywhere.

**Ayurvedic Compound Tinctures Ltd.,**
**Trivandrum.**

## ரஸாயனம் அல்[illegible]

### (பத்திராதிபர்)

ஸோ[illegible]ங்கள் 24 என்பதும் அதன் பேதங்களும் சென்ற சஞ்சிகையில் [illegible]விரித்தோம். இனி ஸோமங்களுக்கு அடுத்தபடியாகவும் ஆனால் ஸோமங்களுடைய குணத்தையே சற்றேறக்குறைய அடைந்துமுள்ள மூலிகைகளை கவனிப்போம். சுசுருதம் சிகித்ஸாஸ்தானம் 30-வது அத்தியாயத்தில் 18 ஓஷதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளாவன—ச்வேதகாபோதீ, கிருஷ்ணகாபோதீ, கோநஸீ, வாராஹீ, கந்யா, சத்ரா, அதிசத்ரா, கரேணு, சக்ரகா, ஆதித்யபர்ணிநீ பிரஹ்மஸுவர்சலா, ச்ராவணீ, மஹாச்ராவணீ, கோலோமீ, அஜலோமீ மஹாவேகவதீ, அஜா, அஜகரீ, இவை 18ம் ஸோமஸமங்கள் எனப்படுகின்றன. இவைகளின் லக்ஷணங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. **ச்வேதகாபோதீ**—இலைகளின்றி தங்கநிறமாயும் இரண்டு அங்குலம் வேர் உள்ளதாயும் சிகப்பு நுனியுள்ளதாயும் ஸர்ப்ப உருவமுள்ளதாகவுமிருக்கும். **கிருஷ்ணகாபோதீ**—பால் உள்ளதாயும் மயிர் (முள்) அடர்ந்தும் மிருதுவாயும் கரும்புச்சார் போன்ற ருசியுள்ள சார் உள்ளதாயும் இருக்கும். **கோநஸீ**—இரண்டு இலையுள்ளதாயும் வேர் உள்ளதாயும் சிகப்பாயும் கருத்த புள்ளிகள் உள்ளதாயும் இரண்டு அரத்னி நீளமாயும் (அரத்னி என்பது சுமார் ஒருமுழம்) பாம்பரணைபோன்ற உருவமுள்ளதாயும்இருக்கும். **வாராஹீ**—கிருஷ்ண சர்ப்பம் போன்ற உருவமுள்ளதாயும் கிழங்குடன் ஒரு இலையுள்ளதாயும் மை போன்ற நிறமுள்ளதாயும் மிகுந்த வீர்யமுள்ளதாகவும் இருக்கும். குறிப்பு—இந்த வாராஹீ என்பது அஷ்டாங்க ஹிருதயத்திலும் ரஸாயனமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. "வாராஹீ கந்த மார்த்ரார்த்ரம் க்ஷீரேண க்ஷீரப: பிபேத்" பச்சையான வாராஹீ கிழங்கை பால் விட்டரைத்துப் பாலில் கலக்கிச் சாப்பிடவேண்டுமென்பது பொருள். ஷை சுலோகத்தின் உரையில் வாராஹீ என்பதற்கு விருத்ததாரகம் எனப்பொருள் எழுதப்பட்டிருக்கின்றது. ஆனால் அது பொருத்தமற்றதாகக் காணப்படுகின்றது. ஏனெனில் விருத்ததாரகமும் வாராஹீ என்பதும் தனிப்பொருளாக நூல்களில் காணப்படுகின்றன. **கந்யா**—அழகான 12 இலைகளுள்ளதாயும் கிழங்குள்ளதாயும் [illegible] உள்ளதாயும் இருக்

கும். **சத்ரா—அதிசத்ரா**—இவையிரண்டும் கிழங்குள்ளவைகளாகவும் ச்வேதகாபோதியின் லக்ஷணமுள்ளவைகளாகவும் இருக்கும். **கரேணு**—மிகுந்த பால் உள்ளதாயும் யானை வடிவமுள்ள கிழங்குள்ளதாயும் ஹஸ்திகர்ணபலாச மரத்தினுடைய இலைபோன்ற இலையுள்ளதாகவும் இரட்டை யிலையுள்ளதாகவும் இருக்கும். **சத்ரகா**—வெண்ணிறமுள்ளதாயும் பல நிறமான புஷ்பங்களுள்ளதாயும் புல்லுருவி போன்றதாயும் சிறு செடியாகவும் இருக்கும். **ஆதித்யபர்ணீ**—இதற்கு ஸூர்யகாந்தமெனவும் பெயர் உண்டு வேர் உள்ளதாயும் ஐந்து இலைகள் உள்ளதாயும் எப்பொழுதும் சூரியனைப்பார்த்துத்திரும்பிக் கொள்ளும் குணமுள்ளதாயும் இருக்கும். **பிரம்மஸுவர்சலா**—தங்கம் போன்ற நிறமுள்ளதாயும் ஜலப்பிரதேசங்களில் வளருகின்றதாயும் பாலுடன் கூடியதாயும் தாமரை இலை போன்ற இலையுள்ளதாயும் இருக்கும். **ச்ராவணீ** வெளுப்பு நிறமுள்ளதாயும் கீழே சொல்லப்படும் மஹாச்ராவணீ லக்ஷணம் பொருந்தியதாயும் இருக்கும். இதற்கு கொட்டைக் கரந்தையெனத் தமிழில் பெயர். **மஹாச்ராவணீ**—முழம் உயரமுள்ள செடியாகவும் இரண்டு அங்குலமுள்ள யிலைகளுடன் கூடியதாயும் கருநெய்தல் போன்ற புஷ்பங்களை யுடையதாயும் மை போன்ற நிறமுள்ள பழங்களுடன் கூடியதாயும் தங்கநிறமுள்ளதாயும் பாலுள்ளதாகவும் இருக்கும். இதைச் சிவக்கரந்தை யென சிலர் நினைக்கின்றனர். **கோலோமீ—அஜலோமீ**—இவ்விரண்டும் மயிர் (முள்) உள்ளவைகளாகவும் கிழங்குள்ளவைகளாகவும் சிறு புள்ளடி இலைகள் போல் மிளந்த யிலைகளுள்ளவைகளாகவும் சங்கபுஷ்பிபோன்றவைகளாகவும் இருக்கும். **மஹாவேகவதீ**—பாம்பு சட்டைபோன்றதாயும் மிகுந்த வேகத்துடன் கூடியதாயும் சரத்காலத்தில் முளைப்பதாயும் இருக்கும். **அஜா**-வெள்ளாட்டின் முலைக்காம்பு போன்ற கிழங்கை யுடையதாயும் பாலுள்ளதாயும் சிறு செடியாகவும் சங்கம் போன்ற வெளுப்பு நிறமுள்ளதாகவும் இருக்கும். **அஜகரீ**—பாம்பு உருவத்துடனும் ஐந்து இலைகளுள்ளதாகவும், மஞ்சள் புள்ளிகள் விழுந்த இலைகளுள்ளதாகவும் ஐந்து அரத்னி அளவுள்ளதாகவும் (அரத்னி என்பது சுமார் ஒரு முழம் நீளம்) இருக்[illegible] ஹிரண்யஸுவர்சலா என்ற ஓஷதி

யானது விந்து நக்ஷத்திரங்களிலும் தேவஸூக்தம் என்ற பள்ளத்தாக்கிலும் முளைக்கும். வஸந்தகாலத்தில் ஆதித்யபர்ணினீ முளைக்கும். மழை காலத்தில் கோநஸீ முளைக்கும். அஜகரீ எப்பொழுதும் காணப்படும். காச்மீரத்தில் கரேணு, கந்யா, சத்ரா, அதிசத்ரா, கோலோமீ, அஜலோமீ, மஹாச்ராவணீ இவை கிடைக்கும். கௌசிகி நதீதீரத்தில் பாம்பு புத்துகளின்மேல் ச்வேதகாபோதீ முளைக்கும். மலய பர்வதத்திலும் ஸேதுவிலும் வேகவதீ காணப்படும்.

முன்சொன்ன 18 வகைகளில் பால் இல்லாமல் வேர் மாத்திரம் உள்ளவைகளின் தண்டுகளில் ஓட்டை அளவுள்ள மூன்று துண்டங்களை ஒரு வேளையில் உபயோகிக்கவேண்டும். ச்வேதகாபோதியை வேர் இலை எல்லாவற்றுடன் உபயோகிக்க வேண்டும். கோநஸீ, கிருஷ்ணகாபோதீ, அஜகரீ, இம்மூன்றை உபயோகிக்கும்பொழுது ஒரு பிடியளவு எடுத்து சிறுதுண்டாக்கி பசுவின்பாலில் போட்டுக் காய்ச்சி வடிகட்டி ஒரு வேளை உபயோகிக்கவேண்டும். சக்ரகா என்ற ஓஷதியின் பாலை ஒரு தடவை உபயோகிக்கவேண்டும். மற்றவைகளில் 20 தோலா எடுத்துச் சின்னப்படி நான்கு படி பாலில் போட்டுக்காய்ச்சி ஒரு படி பாலாக வற்றினவுடன் இறக்கி வடிகட்டி ஒரு தடவை உபயோகிக்க வேண்டும். முன் ஸோமங்களுக்குச் சொன்ன மாதிரி பத்யங்கள் முதலியவை அனுஷ்டிக்கவேண்டும். சரீரத்தில் வெண்ணை தடவி ஸ்நாநம் செய்ய வேண்டும். ஸோமங்களின் குணங்கள் இவைகளுக்கும் உண்டு. சரகம் சிகித்ஸா ஸ்தானம் முதல் அத்தியாயம் நான்காவது பாதத்தில் ஸோமம் நீங்கலாக எட்டு ஓஷதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை யாவன—பிரஹ்மஸுவர்சலா, ஆதித்யபர்ணினீ, நாரீ, காஷ்டகோதா, ஸர்ப்பா, பத்மா, அஜா, நீலா ஆக இவ்விதம் எட்டு ஓஷதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஸோமத்தை உபயோகிக்கும் விதமே இவைகளையும் உபயோகிக்கவேண்டும். இவற்றுள் ஏதாவது ஒன்றின் ரஸத்தைப்பிழிந்து வயிறு நிறைய திருப்தியாக ஒரு தடவை சாப்பிடவேண்டும். எண்ணைப்பசையுள்ள ஈரமான புரசம்தொட்டியில் வஸ்திரமின்றி நிர்வாணமாகப் படுத்திருக்க வேண்டும். புதி காலத்

தில் வெள்ளாட்டுப்பால் சாப்பிடவேண்டும். இவ்விதம் செய்தால் ஸோமங்களுக்குச் சமானமான பலன் கிடைக்குமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இவற்றுள் நாரீ, பத்மா, நீலா என்ற மூன்று விதங்கள் சுசுருதத்தில் காணப்படவில்லை. மற்ற ஐந்து விதங்களும் கீழ் சொன்ன 18 விதங்களுள் காணப்படுகின்றன. சரகத்தில் வைடி அத்யாயத்தில் மற்றும் 16 மூலிகைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன—ஐந்த்ரீ, பயஸ்யா, க்ஷீரபுஷ்பீ, ச்ராவணீ, மஹாச்ராவணீ, சதாவரீ, ஜீவந்தீ, விதாரீ, புநர்நவா, நாகபலா, ஸ்திரா, வசா, சத்ரா, அதிசத்ரா, மேதா, மஹாமேதா என்பவைகளே. இவற்றுள் ச்ராவணீ, மஹாச்ராவணீ, சத்ரா, அதிசத்ரா என்ற நான்கும் சுசுருதத்தில் முன்சொன்ன 18 விதங்களுள் காணப்படுகின்றன. மற்ற 12-ம் கிடைக்கக்கூடியவைகளே. இந்த 16 விதங்களுள் ஏதாவது ஒன்றை பாலுடன் அறு மாதம் உபயோகிக்க சிரபலம் உண்டாகும்.

ஸோமங்கள் 24, ஸோமஸமங்கள் 18, சரகத்தில் அதிகப்படியாகச் சொல்லியுள்ள ஸோமஸமங்கள் 3, ஆக மொத்தம் 45 இவற்றுள் தற்காலம் நமக்குக் கிடைக்கக்கூடியவை—ஆதித்யபர்ணினீ, ச்ராவணீ, மஹாச்ராவணீ, வாராஹீ, ஆக இந்த நான்கே. ஆகவே உயர்ந்த ரஸாயனங்களாகக் கருதப்படும் 41 சரக்குகள் நமக்கு துர்லபமாகவிருக்கின்றன. இவைகள் துர்லபமென்பதை வாக்படரும் அஷ்டாங்கஹ்ருதயத்தில் குறிப்பித்திருக்கின்றனர். ஆகவே இச்சரக்குகளில் ஒன்றுகூட வாக்படரால் சொல்லப்படவில்லை. "அபராணி ப்ராப்தியாதி கஷ்டாநி ந கீர்த்திதானி" இந்த 41 சரக்குகளும் துர்லபங்களானவை பற்றி அவைகளை எழுதவில்லை என்பது அவ்வசனத்தின் பொருள். சரக வியாக்யானத்திலும் "ரிஷிபிரேவ அநேக நாம்நா க்யாயந்தே ந லௌகிகை:—லோகாப்ரஸித்தத்வாத்" கீழே கூறப்பட்ட பெயர்கள் ரிஷிகளுக்கும் முனிவர்களுக்குமே புலப்படும். உலகத்திலுள்ள மற்றவர்களுக்கு இப்பெயர்கள் விளங்காது. இவைகளைப் பொது ஜனங்கள் அறியார் எனக் கூறப்பட்டிருக்கின்றது. ஆகவே இவைகளை நாம் ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்து விடுவதென்பது சாத்தியமல்ல. இனி அஷ்டாங்க ஸங்கிரஹத்தையொட்டி ரஸாயன

முறைகளை எழுதுகின்றோம். முன்சொன்ன 45 வகைகளில் வாராஹீ முறை பின்னால் எழுதப்படப்போகிறதானதால் அது நீங்கலாக மற்ற 44 பேதங்களில் ஒரு விதமும் அஷ்டாங்க ஹிருதயத்திலாவது அஷ்டாங்க ஸங்கிரஹத்திலாவது சொல்லப்படவில்லை. இனி சொல்லப்போகும் முறைகள் சுலபமாக அனைவரும் செய்யக்கூடியவைகளே.

45. **ஹரீதகீகல்பம்**—ரோகங்களை விலக்குவதில் கடுக்காய்க்கு நிகர்வேறு கிடையாதெனக்கருதி சரகஸம்ஹிதையில் கடுக்காய் கல்பமே முதலில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கடுக்காயில் ஐந்து ரஸங்கள் இயற்கையில் அமைந்துள்ளன. ஆகவே ரோகங்களனைத்தையும் விலக்கி ஆயுளை நீடிக்கச்செய்வதில் இது இணையற்றதாகக் கூறப்படுகின்றது. ஹிமயமலையில் உண்டாகும் கடுக்காய்களே சிறந்தவை. சரியான காலத்தில் நன்கு பழுத்த கடுக்காய்களை எடுத்து இரண்டு மூன்றாக வெட்டி 256 தோலா எடுத்து சின்னப்படி 16 படி பசும்பாலில் போட்டு வேகவைத்து (பால் சுண்டினவுடன்) எடுத்து கடுக்காய்த்துண்டுகளைச் சற்று நிழலில் உலர்த்தி பிறகு ஓர் ஜாடி அல்லது மண்பானையில் போட்டு நெய், தேன், இவை வகைக்குச் சின்னப்படி 8 சேர்த்து மூடி மூன்று நாள் வைத்திருந்து பிறகு பிரதிதினம் ஒரு வேளை உபயோகிக்கவேண்டும். ராத்திரி ஆகாரத்திற்கு (சாப்பாட்டிற்கு) விரோதம் இல்லாதபடி மருந்தின் அளவு இருக்கவேண்டும். மருந்து ஜீர்ணமாகி பசி எடுத்த பிறகு சம்பா அரிசி சாதமும் பசும்பாலும் ஆகாரமாக உபயோகிக்க வேண்டும். இவ்விதம் அந்த கடுக்காய் முழுவதும் சாப்பிடவேண்டும். அது வரை இதே பத்தியம் அனுஷ்டிக்க வேண்டும். மருந்து முடிந்த பிறகும் மருந்து எவ்வளவு நாள் உபயோகிக்கப்பட்டதோ அவ்வளவு நாள் மருந்தில்லாமல் முன் சொன்னபடி மறுபத்தியம் மாத்திரம் அனுஷ்டிக்கவேண்டும். இம்மருந்தால் நூறு வருஷம் நரையின்றியிருப்பதுடன் சரீரபலமும் விருத்தியாகும். இது அஷ்டாங்கஸங்கிரஹத்தில் மாத்திரம் காணப்படுகின்றது.

46. **ப்ராஹ்மரஸாயனம்**—இம்முறை அஷ்டாங்கஹிருதயம், அஷ்டாங்கஸங்கிரஹம், சரகம் இவைகளில் சொல்லப்பட்டிருக்

கின்றது. சுசுருதத்தில் காணப்படவில்லை. இதை **அபயா ப்ராஹ்ம** ரஸாயனமென்றும் பெரியோர்கள் அழைப்பார்கள். இனி சொல்லப்போகும் மற்றொரு ப்ராஹ்மீரஸாயனத்தை **ஆமலகீப்ராஹ்ம** ரஸாயனமென்றும் சொல்லுவார்கள். கண்டங்கத்திரி முள்ளி, சித்தாமல்லி, பேராமல்லி, சிறுநெருஞ்சி, பில்வம், முன்னை, பெருவாகை, பாதிரி, பெருங்குமிழ், வெள்ளைச்சாரணை, சித்தாமல்லி பேராமல்லி, குருந்தொட்டி, ஆமணக்கு, ஜீவகம், ரிஷபகம், மேதா, ஜீவந்தி, தண்ணீர்விட்டான்கிழங்கு, நாணல், கரும்பு, தர்ப்பம், சரம், நெல்பயிர், இவை வகைக்குத் தோலா 40, கடுக்காய் 1000, நெல்லிக்காய் 3000 இவைகளைப் பத்து மடங்கு ஜலத்தில் போட்டு பத்தில் ஒன்றாக வற்றவைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி அந்த வெந்த நெல்லிக்கனிகளையும் கடுக்காய்களையும் உடைத்து உள்ளிருக்கும் விதை நீக்கிப் பிறகு அந்தக்கஷாயத்தில் போட்டு வல்லாரை, திப்பிலி வெள்ளைக்காக்கணட்டான், பெருங்கோரை, கோரைக்கிழங்கு, வாய்விளங்கம், சந்தனம், அகரு, அதிமதுரம், மஞ்சள் வசம்பு, சிறுநாகப்பூ, சிறு எலம்,கருவாப்பட்டை, இவைவகைக்குத்தோலா16 இடித்து வஸ்திரகாயம் செய்து அந்தப்பொடியையும் அதில்போட்டு கல்கண்டு 4400 தோலா இடித்துப்பொடிசெய்து அதையும் நல்லெண்ணைசின்னப்படி 16, நெய் சின்னப்படி 24, இவைகளையுஞ்சேர்த்துத் தாமிரப்பாத்திரத்தில் மந்தாக்னியாக எரித்து லேகியம் செய்ய வேண்டும். ஆறின பிறகு தேன் சின்னப்படி 20 சேர்த்து நன்றாகக் கலந்து விடவேண்டும். தினம் காலையில் மாத்திரம் ஒரு வேளை இம் மருந்தை உபயோகிக்கவேண்டும். பகல் ஆகாரம் தேவையில்லாமலிருக்கும்படிமருந்தின் அளவுஇருக்கவேண்டும். அதாவது பகலில் பசியில்லாமலும் ராத்திரியில் பசியுண்டாகும்படியாகவும் மருந்தின் அளவு இருக்கவேண்டும். மருந்து ஜீர்ணமான பிறகு அரிசி சாதமும்பாலும் சாப்பிடவேண்டும். வேறு ஆகாரம் கூடாது. இதற்குப்ராஹ்ம ரஸாயனம் எனப்பெயர். பல முனிவர்களும் ரிஷிகளும் இதையுப யோகித்து திடசரீரமும் நீண்ட ஆயுளும் பெற்றனர். செய்முறை—கடுக்காய், நெல்லிக்காய், இவைகளை கணக்குப்படி எடுத்து அவைகளை நிறுத்து அதற்குப்பத்து மடங்கு ஜலம் சேர்த்துக்கொண்டு கஷாயம் செய்யவேண்டும். ஜீவந்தி என்

பதற்கு அடபொதியன் கிழங்கு என மலையாள தேசத்தில் சொல்லுகின்றனர். ஜீவகம், ரிஷபகம், மேதா என்ற சரக்குகள் தத்காலம் வடதேசத்தில் கிடைக்கின்றன. தென் நாட்டில் இவைகள் கிடைப்பதில்லை. இவை கிடைக்காவிட்டால் இவைகளுக்கு பதில் சரக்குகள் போடும்படி பாவப்பிரகாசத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன:—மேதா, மகாமேதா, இந்த இரண்டு சரக்குகளுக்கும் பதிலாக தண்ணீர்விட்டான்கிழங்கை உபயோகிக்கவேண்டும். ஜீவகம், ரிஷபகம், இவைஇரண்டிற்கும் பதிலாக நிலப்பூசணிக்கிழங்கை எடுத்துக்கொள்ளவேண்டும். காகோலீ, க்ஷீரகாகோலீ, இவை இரண்டிற்கும் பதிலாக அமுக்கராக்கிழங்கைஉபயோகிக்கவேண்டும். ரித்தி, விருத்தி, இவைஇரண்டிற்கும் பதிலாக வாராஹீகிழங்கை உபயோகிக்கவேண்டும். ஆயுர்வேதத்தில் அஷ்டவர்க்கமென எட்டு சரக்குகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன—காகோலீ, க்ஷீரகாகோலீ, மேதா, மஹாமேதா, ஜீவகம், ரிஷபகம், ரித்தி, விருத்தி, ஆகிய இந்த எட்டிற்கும் அஷ்டவர்க்கமெனப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆயுர்வேதத்திலுள்ள பல முறைகளில் இந்த எட்டு சரக்குகளும் சேருகின்றன. இவைகள் மிகவும் துர்லபமெனவும் சொல்லப்படுகின்றன. இவைகளின் லக்ஷணம் அடியில் கண்டவாறு காணப்படுகின்றது. **காகோலீ க்ஷீரகாகோலீ**—இவை இரண்டும் அநேகமாக ஒரே இடத்தில் முளைக்கின்றன. க்ஷீரகாகோலியின் கிழங்கு அமுக்கராக்கிழங்குக்கு சமமாயும் நல்ல வாசனையுண்டயதாகவும் பாலுள்ளதாகவும் இருக்கும். இது வெளுப்பு நிறமாகவிருக்கும் காகோலீ கிழங்கும் க்ஷீரகாகோலீ போன்றதாக விருக்கும். ஆனால் சற்று கறுப்பு நிறமாகவிருக்கும். இந்த நிறந்தான் இவையிரண்டிற்குமுள்ள பேதம். இவையிரண்டைப் பற்றிய விவரம் இவ்வளவுதான் நூல்களில் காணப்படுகின்றது. இவையிரண்டும் கொடியினத்தைச்சேர்ந்தவையாக ஊகிக்கலாம். க்ஷீரவல்லிகா என்று இவைகளுக்குப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. வல்லீ = கொடி எனப் பொருளானது பற்றி இவைகள் கொடியினத்தைச் சார்ந்தவைகளென நினைக்கப்படுகின்றது. **மேதா**—இது கொடியினத்தைச் சேர்ந்தது கிழங்குடன் கூடியது. கிழங்கு வெளுப்பாகவும் நகத்தால் கிள்ளிவிடக்கூடியதாகவும் (கிழங்கைக்கிள்ளிவிட்டால் மேதஸ்ஸை Lymph)

போன்ற நிறத்துடன் வரும் ஜலமுள்ளதாகவும் இருக்கும். ஆகவே இதற்கு மேதா எனப்பெயர் இடப்பட்டுள்ளது. **மஹாமேதா**— இது கொடியினத்தைச் சேர்ந்தது. மோரங்கம் முதலிய தேசங்களில் உண்டாகும். கிழங்குடன் கூடியது. வெளுப்பான இஞ்சி போன்ற கிழங்குடன் கூடியது. **ஜீவகம்**—ஹிமாலயத்தில் உண்டாகிறது. இதன் கிழங்கு உள்ளிப்பூண்டு போன்று இருக்கும். திரவமற்று இருக்கும். இதன் இலைகள் மிகவும் பொடியாக (சிறியதாக) இருக்கும். இதன் கிழங்கு அடி பருத்து நுனி சிறுத்து இருக்கும். **ரிஷபகம்**—ஜீவகம் போன்று இருக்கும். ஆனால் கிழங்கு மாத்திரம் மாட்டின் கொம்பு போன்று இருக்கும். **ரித்தி**— இது கோசயாமலம் என்ற இடத்தில் காணப்படுகின்றது. இது கொடியினத்தைச் சேர்ந்தது. இதன் கிழங்கில் ஓட்டை விழுந்திருக்கும். கிழங்கில் வெளுப்பு நிறமான மயிர்கள் இருக்கும். இதன் பழத்தில் அப்பிரதக்ஷிணமான சுற்றுகள் காணப்படும். **விருத்தி** ரித்திபோலவே இது காணப்படும். ஆனால் பழத்தில் பிரதக்ஷிணமான சுற்றுகள் காணப்படும்.

இவ்விதம் அஷ்டவர்க்கத்திற்கு லக்ஷணம் நூல்களில் காணப்படுகின்றன. அகஸ்தியர் நூல்களிலும் சில இடங்களில் காகோலீ முதலியவை காணப்படுகின்றன. தற்காலம் இவை மிகவும் துர்லபம். சேலம் ஜில்லா நாமக்கல் தாலூகாவைச் சேர்ந்த **கொல்லிமலையில்** அஷ்டவர்க்கச் சரக்குகளில் சில இருப்பதாகவும் அநுபவமுள்ள வைத்தியர்களால் அவை உபயோகப்பட்டு வந்ததாகவும் என் தகப்பனார் கூறியுள்ளார். உதாஹரணமாக உள்ளிக்கிழங்கு, பால் உள்ளிக் கிழங்கு என்ற பெயருடன் இரண்டு சரக்குகள் அம்மலையில் கிடைக்கின்றன. அஷ்டவர்க்கத்திலுள்ள ஜீவகம், ரிஷபகம் என்பவைகளே அவை யென சொல்லப்படுகின்றது. ஜீவகம், ரிஷபகம், இவைகளின் லக்ஷணங்களைச் சொல்லும்பொழுது "ரஸோந கந்தவத் கந்திகா" என லக்ஷணம் காணப்படுகின்றது. உள்ளிக் கிழங்கு போன்ற கிழங்குள்ளவை யென்பது அதன் பொருள். ஆகவே அவைகளை உள்ளிக்கிழங்கு என அழைப்பதும் பொருத்தமாயிருக்கிறது. தற்காலம் மதுரையில் உள்ளிக்கிழங்கு" என்ற ஓர் சரக்கு கிடைக்கின்றது. அது பார்வைக்கு உள்ளிப்பூண்டு

போன்று இருக்கின்றது. கொல்லிமலைக்கிழங்கு போலவே காணப் படுகின்றது. இரண்டு சரக்குகளும் ஒன்றுதான் என நிர்ணயிப்பது கஷ்டமாகவிருக்கின்றது. கொல்லிமலைக்கிழங்கை மாத்திரம் நாம் பார்த்திருக்கிறோமே யல்லாது அதன் இலைகள், தண்டுகள், முதலியவைகளைப் பார்த்ததில்லை. மதுரையில் கிடைக்கும் கிழங்குக்கு மருள் இலை போன்ற இலைகள் இருக்கின்றன. அஷ்ட வர்க்கம் எட்டு சரக்குகளும் தத்காலம் வடதேசத்தில் கிடைக்கின் றன. பல நிபுணர்கள் அவைகளை ஆராய்ந்து அவை சரியானவை யென அபிப்பிராயப்படுகின்றனர். ஒரு சிலர் அவற்றிலும் சந்தேகம் கொள்ளுகின்றனர். இந்த எட்டு சரக்குகளும் சார்ங்கதரர் காலம் வரையில் வழக்கத்தில் இருந்து வந்திருக்கின்றன. அவருக்குப் பிறகு வந்த பாவப்பிரகாசக்காரர் நாளிலிருந்து இவை துர்லபமாயின வெனத்தெரிகின்றது. ஏனெனில் பாவப்பிரகாசத்தில் தான் இவை துர்லபமெனக்கருதி பதில் சரக்குகள் சொல்லப்பட்டிருக்கின்றன. சித்தாமல்லி, பேராமல்லி, என்ற இரண்டு சரக்குகளும் ஓரிலை, மூவிலை யென மலையாளத்தில் அழைக்கப்படுகின்றன. அதிமதுரம் என்ற சரக்குக்குப் பதிலாக குன்றுமணிவேர் அப்பெயருடன் வழங்குகின் றது. நமது கடைகளில் கிடைப்பது குன்றுமணிவேரே. ஒரு சரக்கு இரண்டு தடவை ஒரே மருந்தில் வந்தால் அதை இரு மடங்கு எடுத்துக்கொள்ளவேண்டும். இம்மருந்தை உபயோகிக்கும் பொழுது கரண்டியால் கலக்கி நெய், தேன், வகையறுக்களுடன் மருந்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

47. **அபயாக்ருதம்**—கடுக்காய், நெல்லிக்காய், தான் றிக்காய், ஐந்து பஞ்சமூலம், இவை வகைக்குத்தோலா ஐந்து எடுத்து இடித்து ஓர் பானையில் போட்டு சின்னப்படி 16 ஜலம் விட்டு காய்ச்சி 4 படியாக வற்றவைத்து அதை வடிகட்டி ஓர் இரும்பு பாத்திரத்தில் விட்டு அதில் பசும்பால் சின்னப்படி 32 பசு நெய் சின்னப்படி 4 புரசம்பட்டை ரஸம் சின்னப்படி ஒன்று இவை களைச் சேர்த்து அதில் அதிமதுரம், இலுப்பை, காகோலீ க்ஷீரகாகோலீ, குருந்தொட்டி, பூனைக்காலிவிதை, நிலப்பூசணிக் கிழங்கு, ரிஷபகம், ஜீவகம், இவை வகைக்குத்தோலா $7\frac{1}{8}$ பொடி செய்து சேர்த்து கிருதபதமாகக் காய்ச்சி சுடு ஜலம் அனுபானத்

துடன் உபயோகிக்க மிகுந்த குணம் கொடுக்கும். குறிப்பு—புரசு மரத்தில் வல்லீபலர்சம் என்ற ஓர் வகையுண்டு. அதில் கிளைகள் கொடிபோல சற்று சிறுத்து நீண்டு இருக்கும். அது கிடைக்காவிட்டால் சாதாரண புரசு உபயோகிக்கவும். இலுப்பை மரத்தின் புஷ்பத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். இம்முறை அஷ்டாங்க சங்கிரஹத்தில் மாத்திரம் காணப்படுகின்றது. அளவு முன்போலவே அதாவது இரவு ஆகாரத்திற்கு விரோதமில்லாமல் இருக்க வேண்டும். 6 வது பக்கத்தில் கண்டங்கத்திரி முதல் நெல்பயிர் வரையுள்ள 25 சரக்குகள் ஐந்து பஞ்சமூலாகும்.

48. **பிராஹ்மரஸாயனம்**—இது அஷ்டாங்க ஸங்கிரஹம் சரகம் ஆகிய இவை இரண்டு நூல்களிலும் காணப்படுகின்றது. இதை ஆமலகி பிராஹ்மரஸாயனம் எனவும் அழைப்பார்கள். நல்ல பழுத்த நெல்லிக்காய் ஆயிரம் எடுத்து மாவை வேக வைக்கும் முறையில் பசும்பால் ஆவியில் நன்முக வேகவைத்து எடுத்து உள் விதையை நீக்கி நிழலில் உலர்த்தி அதை இடித்துப் பொடிசெய்து பிறகு ஆயிரம் நெல்லிக்காயை இடித்து அந்த ரஸம் முழுவதையும் அந்தப்பொடியில் விட்டு பாவனை செய்து பிறகு சித்தாமல்லி, வெள்ளைச்சாரணத்தி (இதை வெள்ளைச்சாரடை என்று சில இடங்களில் அழைப்பார்கள்.) ஜீவந்தி (இதை அடபதியன்கிழங்கு என அழைக்கின்றனர்) நாகபலா, பிரம்மஸுவர்சலா, வல்லாரை, தண்ணீர்விட்டான், வெள்ளைக்காக்கணட்டான், திப்பிலி, வசம்பு, வாய்விளங்கம், பூனைக்காலிவிதை, சீந்திற்கொடி, சந்தனம், அகரு, அதிமதுரம், இலுப்பைப்பூ, கருநெய்தல் கிழங்கு, தாமரைக்கிழங்கு, முல்லை, மல்லிகை, பிச்சி, (இம்மூன்றின் வேர்களை எடுத்துக் கொள்ளவும்) இவையனைத்தும் சமபாகமாக இடித்துப் பொடியாக்கி ஷை நெல்லிக்காய் சூர்ணத்தில் எட்டில் ஒரு பாகமாகச் சேர்த்து நாகபலா வேர் தோலா 4000 எடுத்து இடித்துக் கஷாயம் செய்து அக்கஷாயத்தால் ஷை சூர்ணம் முழுவதையும் பாவனை செய்து நிழலில் உலர்த்திப் பொடிசெய்து அந்தச்சூர்ணம் இடைக்கு இருபங்கு தனி நெய்யையாவது அல்லது நெய், தேன் இரண்டையுமாவது சேர்த்துக்கலந்து நெய் வைத்துப்பழகின மண்பானையில் வைத்து வாய் மூடி பூமியில் புதைத்து 15 நாள் கழித்து எடுத்து தங்கம், வெள்ளி, தாமிரம், பவழம், அரப்பொடி இவைகளைச் சமபாகமாக

எடுத்து ௸ மருந்து சூர்ணத்தில் எட்டில் ஒரு பாகமாகச் சேர்த்துக் காலையில் அரைத்தோலா முதல் ஆரம்பித்துப் பிறகு பிரதிதினம் அரைத்தோலாவாக அதிகம் கூட்டி உபயோகிக்கவும். பத்தியம் முதலியவை முன்போல. குறிப்பு—இட்லி முதலிய பதார்த்தங்களை ஆவியில் வேகவைப்பது போல நெல்லிக்காய்களையும் பசும்பால் ஆவியில் வேகவைக்க வேண்டும். ஆயிரம் நெல்லிக்காய்களையும் ஒரே பானையில் வேகவைக்க முடியாது. ஆகையால் 4-5 பானைகளை வைத்து ஒரே காலத்தில் அடுப்பேற்றி பக்குவம் செய்து கொள்ள வேண்டும். அல்லது ஒவ்வொரு பானையாகவும் பக்குவம் செய்து கொள்ளலாம். ௸ நெல்லிக்காய்களைச் சூர்ணம் செய்து பிறகு சித்தாமல்லி முதலிய22 சரக்குகளைச் சமமாக எடுத்துப் பொடி செய்து ௸ நெல்லிக்காய்ப் பொடியின் இடைக்கு எட்டில் ஒரு பங்கு எடுத்துச் சேர்த்து இரண்டு பொடிகளையும் நன்றாகக் கலந்து பிறகு நாகபலா கஷாயத்தால் பாவனை செய்யவேண்டும். நாகபலா என்பதற்கு ஊராகம் என மலையாளத்தில் சொல்லுகின்றனர். வடதேசத்தில் நாகபலா என்ற செடி வேறு விதமாக இருக்கிறது. அதில் 4000 தோலா எடுத்து இடித்து ஓர் மண்பானையில் போட்டு சின்னப்படியில் 500 படி சுத்தஜலம் விட்டு நான்கில் ஒன்றாக வற்ற வைத்து அதை வடிகட்டி அக்கஷாயத்தால் ௸ சூர்ணம் முழுவதையும் பாவனை செய்யவேண்டும். அதாவது 125 படி கஷாயத்தால் பாவனை செய்ய வேண்டும். ௸ கஷாயத்தை ஒரே தடவையாகத் தயார்செய்து கொண்டு ஒரே தடவையில் பாவனை செய்தால் கஷாயம் இஞ்சுவதற்கு வெகு நாள் செல்லும் ஆகையால் கஷாயம் புளித்துவிடும். ஆகவே ஒரே தடவையாகக் கஷாயத்தை விடாமல் சூர்ணத்திற்கு ஏற்றவளவு எடுத்து புதிது புதிதாகக் கஷாயத்தைத் தயாரித்து விடவேண்டும். தங்கம் முதலிய ஐந்து பதார்த்தங்களைச் சமயிடையாக எடுத்து ௸ பாவனை செய்த சூர்ணத்தில் எட்டில் ஒரு பங்குக்குச் சேர்த்துக் கொள்ள வேண்டும். தங்கம் முதலியவைகளை ரேக்காக அடித்துப் பிரதிதினம் சாப்பிடும் ௸ மருந்தின் அளவில் எட்டில் ஒரு பங்குக்குப் புதிது புதிதாகச் சேர்த்துக் கொள்ளலாம். அப்பொடியை நாகபலா கஷாயத்தில் நன்றாக அரைத்து வெண்ணெ போலாக்கி உலர்த்திக்கொள்ளவும். மற்றவைகளைப்

பச்சையாக அப்படியே எடுத்துக்கொண்டு கல்வத்தில் விட்டு மருந்தையும் கல்வத்தில் போட்டு ஒன்று சேர்த்து மர்தித்து உபயோகிக்கவேண்டும். தங்கம் முதலியவைகளுக்குச் சொல்லியுள்ள சுத்திகளைச் செய்துவிட்டுப் பிறகு அதை ரேக்காகத் தட்டி உபயோகிக்கவேண்டும். இவ்விடத்தில் தங்கம் முதலியவைகள் பஸ்மம் செய்யாமல் பச்சையாக அப்படியே உபயோகிக்க வேண்டுமென்பதற்கு சாஸ்திர ஆதாரங்களை ஏற்கனவே சென்ற சந்திரிகைகளில் விளக்கியுள்ளோம். இம்முறையில் அஷ்டாங்க சங்கிரஹத்திற்கும் சாகத்திற்கும் சற்று பேதமிருந்தபோதிலும் அதிக முக்கியமில்லாத காரணம் பற்றி அதை விவரிக்கவில்லை. இரும்பை மாத்திரம் சுத்திசெய்தபிறகு மெல்லிய பொடியாக அரைத்துக்கொண்டு தயாரித்துக்கொள்ளவேண்டும்.

49. **ஆமலகரஸாயனம்**-நல்லபழுத்தநெல்லிக்கனி ஆயிரம் எடுத்து ஓர் பலாசமரப்பெட்டியில் போட்டு ஆவிபோகாமல்மூடிவிட்டு பசு எருவால் தீமூட்டி நெல்லிக்கனிகள் நன்றாக வெந்து ஆறின பிறகு எடுத்து அவைகளின் விதைகளை நீக்கி இடித்து திப்பிலிப் பொடி வாய்விளங்க அரிசிப்பொடி ஆகிய இவை வகைக்குத்தோலா 256 சர்க்கரை தோலா 384 நல்லெண்ணை, தேன், நெய், இவை வகைக்குச் சின்னப்படி 16, சேர்த்து நன்றாகக் கலக்கிப் பிறகு நெய் வைத்துப் பழகின ஓர் மண்பானையில் வைத்து 21 நாள் கழித்து உபயோகிக்கவும். முன் குணமுண்டாம். குறிப்பு—புரசமரத்தால் ஓர் பெட்டி செய்யவேண்டும். அப்பெட்டியில் பலகைகளின் சேர்க்கை இருக்கக்கூடாது. ஏனெனில் அவைகளிலுள்ள சந்தின் வழியாக ரஸம் கசிந்துவரும். அவ்விதமின்றி பெட்டி தயார் செய்யவேண்டும். அதற்கு உபாயமாவது—ஓர் பச்சை மரத்தின் அடிபாகத்தைக் கொண்டுவந்து அதைப் பலகை ஆக்காமல் அப்படியே சுமார் நான்கு முழம் நீளம் வைத்து ஓர் துண்டு செய்து அத்துண்டில் ஓர் பாகத்தில் குடைந்து த்வாரம் செய்து அதாவது ஆயிரம் நெல்லிக்காய் கொள்ளும்படி ஓர் த்வாரம் செய்து அம்மரத்தாலேயே ஓர் மூடியும் செய்து வாய்பொருந்தும்படி செய்து கொள்ளவும். பசுமாடுகள் காட்டில் திரியும்பொழுது விழுந்து தானாக உலர்ந்த சாண எருவால் தீயிடவேண்டும். கடையில் கிடைக்கும் வாய்விளங்கத்தை உரலில் போட்டு இடித்து அரிசியை மாத்திரம் எடுத்துக் கொள்ளவும். இம்மருந்து முழுவதையும் முன்சொன்ன பத்தியத்துடன் உபயோகிக்கவும்.

## சித்தர் முறை

(பண்டிட் நாராயண அய்யங்கார் அவர்கள் எழுதியது)

தேவ சிகித்சை, மனித சிகித்சை என்ற இரு முறைகளிலும் காணப்படும் ரஸாயனங்களில் (காயகல்பங்களில்) ரஸமுறையே போற்றப்படுகின்றது.

काष्ठौषध्यो नागे नागं वङ्गेऽथ वङ्गमपि शुल्बे ।
शुल्बं तारे तारं कनके कनकं च विलीयते सूते ॥
एकोऽसौ रसराजः शरीरमजरामरं कुरुते ।

இதன் பொருள்—சரீரத்தில் ஜரையும் மரணமும் அணுகாவண்ணம் செய்து கொள்ளவேண்டியது ஒவ்வொரு மனிதனின் கடமையாகும். அவ்விதம் செய்து கொள்ளுவதால் இகலோகசுகம் அல்லது பரலோகசுகம் அனுபவிக்க இயலுகின்றது. அதற்கு உபாயங்களை யோசிக்குங்கால் நூல்கள் பல மூலிகைகளைக் கூறுகின்றன. ஆனால் அம்மூலிகைகளால் நாம் நினைக்கும் வண்ணம் பல சித்தியடைய வழியில்லை. ஏனெனில் ரஸாயன மூலிகைகள் அனைத்தும் நீண்டகாலம் ஸ்திரமாக நிற்கும் தன்மை பொருந்தியவைகளாகக் காணப்படவில்லை. அவ்விதமே உலோகங்களும் இருக்கின்றன. கருவங்கத்தை ஓர் சட்டியில் உருக்கி அதில் அந்த ரஸாயனமூலிகைகளுள் எதைப் பொடி செய்து போட்டாலும் அப்பொடி கருவங்கத்தில் மடிந்து போவதைக் கண்கூடாகக் காண்கிறோம். கருவங்கத்தை வெள்வங்கத்தில் முன்போல கொடுத்தால் கருவங்கம் மடிந்து விடுகின்றது. வெள்வங்கம் அவ்விதமே தாமிரத்திலும் தாமிரம் வெள்ளியிலும் வெள்ளி தங்கத்திலும் தங்கம் ரஸத்திலும் மடிந்துவிடுகின்றது. ஆகவே உலகத்தில் ரஸாயனப் பொருள்களாகக் கருதப்படும் சமஸ்த மூலிகைகளும் உலோகங்களும் மற்றொன்றில் மடிந்துபோகும் தன்மை பொருந்தியவையாகக் காணப்படுகின்றன. ஆகவே இவைகளை உபயோகித்து சரீரத்தில் ஜரையும் மரணமும் அணுகாவண்ணம் செய்து கொள்வதென்பது பகற்கனவே

இவைகளை உபயோகித்தால் ஏதோ சில காலம் ஆரோக வாழ்க்கை பெறலாகுமேயன்றி நீடூழி காலம் வாழ்வதென்ற பலன் கிட்டாது. நீடூழிகாலம் வாழ விருப்பமுள்ளவர்களுக்கு **ரஸமுறை** ஒன்று தான் ஏற்ற சாதனமாகின்றது. இந்த ரஸம் நெருப்பில் வேகாமலும் தண்ணீரில் நனையாமலும் காற்றில் உலராமலும் ஸ்திர சுபாவமுள்ளது பற்றி இதே ரஸாயனங்களுள் முதன்மையானதெனப் போற்றப்படுகின்றது. இவ்விதம் ரஸமுறையை அனுபவித்துக் காய சித்தி பெற்றவர்களே சித்தர்களாவர் இவர்கள் எழுதியுள்ள நூல்களே சித்தர் நூல்கள். வடமொழி சித்தர்களைப் பற்றியும் அவர்கள் இயற்றியுள்ள நூல்களைப்பற்றியும் சென்ற சஞ்சிகையில் விவரித்தோம். இனி தமிழ் சித்தர்களை கவனிப்போம்.

தமிழ் சித்தர்கள் 18 பேர்களெனக் கூறப்படுகின்றது. அவர்களாவன—திருமூலர், இராமதேவர், அகஸ்தியர், இடைக்காட்டார், தன்வந்தரி, வால்மீகர், கமலமுனி, போகர், மச்சமுனி, கொங்கணர், பதஞ்ஜலி, நந்திதேவர், சட்டமுனி, சுந்தரானந்தர், பாம்பாட்டி சித்தர், குதம்பைசித்தர், கருவூரார், கோரக்கர், ஆகிய இவர்களே. இவர்கள் கடைசியாக சமாதி யடைந்த ஸ்தலங்களும் ஒருவாறு ஊகிக்கப்படுகின்றன, அதாவது—சிதம்பரம், அழகர்மலை, (இது மதுரைக்குச் சுமார், 10. மைல் தூரத்திலுள்ளது) அநந்தசயனம், திருவண்ணாமலை, வைத்தீசுவரன்கோயில்; எட்டிக்குடி, திருவாரூர், பழனி, திருப்பரங்குன்றம், திருப்பதி, ராமேசுவரம், காசி, சீர்காழி, மதுரை, தியாகராஜபுரம், மாயவரம், கரூர், பொய்யூர், ஆகிய இவை வரிசையாக முன் சொன்னவர்களுடைய சமாதி ஸ்தலங்களாகும். இவர்கள் நீங்கலாக இன்னும் சிலசித்தர்களும்பெரியோர்களும் காணப் படுகின்றனர். உதாஹரணமாக—அழுகண்ணிச்சித்தர் அகப்பேய்சித்தர் பிண்ணாக்கீசர், சொருபானந்தர், புலத்தியர், மவுனசித்தர் முதலியவர்களும் தேரையர், புலிப்பாணி, போன்றவர்களும் நூல்கள் செய்திருந்தபோதிலும் அவர்கள் முன் சொல்லிய 18 சித்தர்களுடன் சேர்க்கப்படவில்லை. இந்த சித்தர்கள் பெரும்பாலும் தமிழ் ஜில்லாக்களில் இருந்தவர்களெனக் கூறலாகும். கன்னடம், மலையாளம், தெலுங்கு முதலிய பாஷைகளில் பல வைத்திய நூல்கள் காணப்படு

கள் நீங்கலாக மற்றவையனைத்தும் இவ்விருமுறைகளுக்கும் பொது வாகவிருக்கின்றன. தசமூலம், திரிகடு, திரிபலை பஞ்சகோலம், முதலிய வடமொழி வைத்திய பரிபாஷை சொற்கள் தமிழ் நூல் களில் விஸ்தாரமாகக் காணப்படுகின்றன. அபினி, கசகசா, கோஷ்டம் இவை போன்ற சரக்குகள் தென் நாட்டில் துர்லபமென் றும் இவை வடதேசத்துச் சரக்குகள் என்றும் யாவருமறிந்தவை. இச்சரக்குகளும் தமிழ் நூல்களில் விஸ்தாரமாகக் காணப்படுகின் றன. கிராணி, அதிசாரம், பிரமேகம், புவுத்திரம் முதலிய சொற் கள் வடமொழிகளே. இவை தமிழ் நூல்களில் ஏராளமாகக் கையாளப்பட்டுள்ளன. நாடி, தாது, போன்ற சொற்களும் அவ் விதமே. மருந்துகளின் செய் முறைகளும் ஒற்றுமையுள்ளவை யாகவிருப்பதையும் பார்க்கலாம். அகஸ்தியர் வைத்திய காவியம் 1500ல் பாட்டு 118—

பாரப்பா லோகமாரணங்கள் சொல்வோம் பாரபிலே விடுகாதே
படக்கி யாடு ஆரப்பா வகையாகச் சொன்னோமேது அடை
வாகச் சொல்லுகிறேன் அடக்கம் விட்டு கேளப்பா வெள்ளியம்
தாளகத்தால் மாளும் நிலையாக காரீயம் மனோசிலையால் மாளும்
காரப்பா இருக்கருவும் லிங்கத்தால் மாளும் கெடியகந்தி தாமிரத்
தை கல்வுந்தானே.

இதன் பொருள்—தாளகத்தால் வெள்ளியமும், மனோசிலையால் காரீயமும், லிங்கத்தால் இரும்பும், கந்தகத்தால் தாமிரமும், படமிட பஸ்மமாகும் என்பதே. இப்பாட்டு வடமொழி சுலோகத்தை அப்படியே மொழி பெயர்த்திருப்பதாகத் தோன்றுகிறது. வட மொழி சுலோகமாவது—

தாலேன வங்கம் திரிவிதம் ச லோஹம் காரீயமோ ஹந்தி ச
ஹிங்குலேன | நாகை: ஸுவர்ணம் ரஜதம் ச தாப்யை: கந்தேன
தாம்ரம் சிலயா ச நாகம் ||

இதன் பொருள்—தாளகத்தால் வங்கமும் (வெள்வங்கமும்) லிங்கத்தால் மூன்று வித இரும்பும் கருவங்கத்தால் ஸுவர்ணமும் நிமிளையால் வெள்ளியும் கந்தகத்தால் தாமிரமும் மனோசிலையால்

கருவங்கமும் புடமிட பஸ்மமாகும் என்பதே. இதுபோலவே ரஸம், தாளகம் முதலியவைகளின் பஸ்மமுறைகளிலும் மிகவும் ஒற்றுமை தென்படுகின்றது.

இது மாத்திரமின்றி வேறு பல உதாஹரணங்களையும் நாம் காட்டக்கூடும். அகஸ்தியர் ஆயுள்வேதத்தில் கண்டாத்திரி லேகிய மென ஓர் லேகியம் கூறப்பட்டுள்ளது. தமிழ் வைத்தியர் அனைவரும் கண்டாத்திரி லேகியமெனவே இப்பொழுதும் அதை அழைக்கின்றனர். வடமொழியில் **கண்டார்த்ரகம்** என வழங்கும் லேகியமே தமிழில் சில மாறுபட்ட எழுத்துக்களுடன் கண்டாத்திரி என அழைக்கப்படுகிறது. கண்ட=துண்டம் ஆர்த்ரகம்=இஞ்சி, ஆகவே கண்டார்த்ரகம்=இஞ்சித் துண்டங்களடங்கிய லேகியம் எனப்பொருள். இவ்விதமே **கோடாசூரிக்குளிகை** என அகஸ்தியரில் சொல்லப்படுகின்றது. இது ஹிந்துஸ்தானிப் பெயர். கோடா=குதிரை, ஜூரி=ரவிக்கை என ஹிந்துஸ்தானியில் பொருள் சொல்லப்படுகின்றது இது அச்வகஞ்சுகி என வடமொழியில் ஓர் மருந்தாக ரஸப்பிரகாச ஸுதாகரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்விதமே பல மருந்துகள் இருமொழி வைத்திய நூல்களிலும் சற்றும் பேதமின்றி கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

வடமொழி வைத்திய நூல்களில்லாத அபூர்வ சரக்கு தென்மொழி வைத்திய நூல்களில் ஒன்று மாத்திரம் காணப்படுகின்றது. அது வீரமென்றும் சவ்வீரமென்றும் அழைக்கப்படுகின்றது. ஜன்னி, சைத்தியம் முதலியவைகளில் வீரம் சேர்ந்த மருந்து மிகவும் உயர்ந்ததென்பதை யாரும் மறுக்கமுடியாது. இந்த ஒரு சரக்குதான் பெரும்பாலும் நாட்டு வைத்தியர்களுக்குப் புகழைக் கொடுக்கவல்லது என்பது நமது அபிப்பிராயம். ஆங்கிலத்தில் Collapse condition என்று சொல்லப்படும் நிலைமையில் நாடியை துரிதப்படுத்தி சைத்தியத்தை மாற்றி நோயாளியை உயிர் மூட்டுவதில் இந்த ஒரு சரக்கே ஒப்புயர்வற்றது. இது ரஸம் சேர்ந்த ஓர் வைப்புச் சரக்கே. இவ்விஷயம் வடமொழி நூல்களில் காணப்பட

வில்லை. இந்த ஒரு விஷயம் நீங்கலாக மற்ற விஷயங்களில் இரு மொழி வைத்தியங்களும் ஒரே ரீதியைப் பின்பற்றி யிருக்கின்றன. இவ்விதம் மறுக்க வொண்ணாத ஒற்றுமை யிருந்தும் ஒரு சிலர் இவ்விருமுறைகளுக்கும் சற்றும் ஒற்றுமையில்லை யெனச் சொல்லுவது கேவலம் விதண்டாவாதமாகும். மற்றொன்றைக் குறைத்துச் சொல்லுவதும் தூஷிப்பதும் மாத்ஸர்யம் பற்றியே யென்பதை அறிஞர் அறிவார்கள். தென் நாட்டிற்குத் தென்மொழி வைத்தியமே இசையுமென்று சிலர் சொல்லுவதும் அறிவீனமாகும். எவ்வளவோ ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள வைத்திய முறைகளால் இந்தியா முழுவதும் பயனடைவதையும் நமது தென்னாட்டு வைத்தியர்கள் வேறு சீமைக்குச் சென்று தமிழ் வைத்தியம் செய்து அவ்விடமுள்ள நோயாளிகளுக்கு குணம் செய்வதையும் கண்கூடாகக் காண்பவர்கள் இப்பிதற்றலை எவ்விதம் ஏற்கமுடியும். ஹிமயமலையில் உண்டாகும் கோஷ்டமும் அபினி முதலியவைகளும் தென்னாட்டில் மருந்துகளாக உபயோகித்து குணம் காணுகிறோர். இவ்விதமே தென்னாட்டில் விளையும் சந்தனக்கட்டை, ஏலம், முதலியவைகள் வடநாட்டில் மருந்துகளாக உபயோகிக்கப் படுகின்றன. ஆகவே இக்கூற்றுக்குச் சற்றும் ஆதாரம் காட்ட முடியாது.

**முப்பு** வென்று ஓர் விஷயம் தமிழ் நூல்களில் காணப்படுகின்றது. வாதமுப்பு வென்றும் வைத்தியமுப்பூவென்றும் அது இருவிதமாக வகுக்கப்பட்டிருக்கின்றது. வாதமுப்பூ என்பது ரஸவாதத்திற்குத் தேவையானது. வைத்திய முப்பூ வென்பது மருந்துகளில் சேரக்கூடியது. முப்பூ என்பது மூன்று சரக்குகளால் ஆகியது. அதன் விவரம் பல நூல்களில் பல் விதமாகக் கூறப்பட்டிருக்கின்றது. ஆகவே அதன் முறையை அனுபவத்தில் அறிந்தவர் இல்லையென்றே கூறலாகும். உண்மையைக் கூறுமிடத்து முப்பூவின் உதவிபெற்று வைத்தியம் செய்யும் சுதேச வைத்தியர் ஒருவரும் தற்காலம் கிடையாது. வடமொழி வைத்திய நூல்களுக்கும் தென்மொழி வைத்ய நூல்களுக்குமுள்ள வித்தியாசம் மூன்று. **முதலாவது**—வடமொழி நூல்கள் பஸ்மசிந்தூரம் முதலிய மருந்துப் போக்குகளை ஒளிவு மறைவின்றி பட்டவர்த்தனமாக

கூறும். படிப்பவர்களுக்குச் சந்தேகம் ஜனிக்காத விதமாகக் கபடமின்றி வியக்தமாக விஷயங்களைச் சொல்லுகின்றன. தென்மொழி நூல்களோ வெளியில் ஒடி மருந்துப்போக்குகளை மறைத்தும் ஒளித்தும் கபடமாகவும் புரியாவண்ணமும் கூறும். **இரண்டாவது**—வடமொழி நூல்களில் கூறியுள்ள ஒவ்வொரு மருந்து சரக்குகளுக்கும் ஒவ்வொரு வியாதியிலும் உபயோகம் காணப்படுவதுடன் ஒவ்வொரு வியாதியையும் தனித்தனி அத்தியாயமாகப் பிரித்து அதற்கேற்ற மருந்துகளும் தனித்தனி அத்தியாயங்களில் காணப்படுகின்றன. தென்மொழி நூல்களில் இவ்விதமின்றி ஒரே குழப்பமாகக் காணப்படும். **மூன்றாவது**-வடமொழி நூல்களில் கூறப்படும் மருந்துகள் அனைவற்றும் குற்றமற்றவை. நிர்பயமாக அவைகளை யாரும் உபயோகிக்கலாம். மருந்தால் கெடுதி யென்பது காணாது. தென்மொழி நூல்களில் சில மருந்துகள் நிச்சயமாக நோயாளிக்கு தொந்திரவை யுண்டு பண்ணும். ஆகவே நிர்ப்பயமாக அவைகளை உபயோகிப்பது கூடாத காரியம். இதுவல்லாதி, ரஸப் பதங்கம் முதலியன இதன் இனத்தைச் சார்ந்தவை.

தமிழ் ஆராய்ச்சியாளர் சித்தர் நூல்களைப் பற்றி வேறுவிதமாக அபிப்பிராயப்படுகின்றனர். தமிழ் சித்தர் நூல்கள் அனைத்தும் சுமார் 200 அல்லது 300 வருஷங்களுக்குள் தொகுக்கப்பட்டவை யென்பது அவர்களின் ஆராய்ச்சி. நாம் சந்தித்த தமிழ் பண்டிதர்கள் அனைவரும் இவ்விதமே அபிப்பிராயப்படுகின்றனர். சில வருஷங்களுக்கு முந்தி சென்னை செனட் சபையில் தமிழைப்பற்றி தொடர்ச்சியாக செய்து வந்த உபன்யாசங்களில் சித்தர் நூல்களைப் பற்றிப் பேசும்பொழுது அவை சுமார் 300 வருஷங்களுக்குட்பட்ட காலத்தில் எழுதப்பட்டவையென உபன்யாசகர் பேசியது தினசரிகளில் வெளி வந்துள்ளது. அதோடு கவித்திறமையும் பண்டிதர்களால் ஒப்புக்கொள்ளப்பட வில்லை. இவ்வபிப்பிராயம் சுதேச வைத்தியர்களுக்கு அருவருப்பை யுண்டாக்குகின்றது. வெகுகாலத்திற்கு முன்பே இந்நூல்கள் எழுதப்பட்டன வென்று அபிப்பிராயம் கொடுப்பது அவர்களுக்கு ஆனந்தத்தை விளைவிக்கும். இந்நூல்களின் பழைமையை ஒரு நிபுணரும் அங்கீகரிக்கவியலவில்லை. ஓர் நிபுணர் அபிப்பிராயம் சொல்லும்பொழுது "சித்தர்களும் அவர்கள் முறைகளும் மிகப் பழைமையானவைகளாக இருக்கலாம். ஆனால் அச்சிட்டு வெளிவந்துள்ள நூல்கள் மாத்திரம் சமீபத்தில் தொகுக்கப்பட்டவை" எனக் கூறினார். நூல்கள் புதியவையா அல்லது பழைமை பொருந்தியவையா என்பதில் கவனம் செலுத்துவதில் அதிக பலன் இல்லை. அதிலுள்ள முறைகள் அத்புதமானவை யென்பதில் சற்றும் ஆக்ஷேபமிருப்பதற்கில்லை.

# வைத்தியர்களுக்கு ஓர் வேண்டுகோள்

திருச்சி ஆயுர்வேதாசார்ய,
(V. B. நடராஜசாஸ்திரிகள் அவர்கள் எழுதியது)

இக்காலம் பத்திரிகை காலம். லோகம் பூராவும் பத்திரிகையினால் நடத்தப்படுகிறது. ஒரு தேசத்தில் நடக்கும் ஸமாசாரங்களை தேசாந்திரத்தில் வசிக்கும் ஜனங்களுக்கு அறிவிப்பது மாத்திரம் இந்நாளில் பத்திரிகைகளின் கார்யமல்ல. ராஜ்ய நிர்வாஹமே பத்திரிகைகளினால் தான் நடக்கிறது என்று சொல்வது கூட மிகையாகாது. லோக நிர்வாஹம் போன்ற லௌகிக விஷயங்கள் மாத்திரமல்ல, சாஸ்திர விஞ்ஞானங்களில் விசேஷ ஆராய்ச்சிகள் செய்வதும், சாஸ்திரங்களில் சர்ச்சைகள், வாதங்கள் செய்வதும், அதிகமெதற்கு? பாடங்கள் படிப்பித்தல் கூட பத்திரிகைகள் மூலம் தான் இக்காலத்தில் நடைபெறுகிறது. இது மிகவும் ஸௌகர்யமாயிருக்கிறது

பழைய காலத்தில் (மகர்ஷிகள் நாளிலிருந்து) தத்வித்ய ஸம்பாஷா மூலம் தான் சாஸ்திர ஞானாபிவிருத்தி செய்வது ஸம்பிரதாயம். தத்வித்யஸம்பாஷணமின்றி சாஸ்திர ஞானாபிவிருத்தி அசாத்தியம். தத்வித்ய ஸம்பாஷணத்திற்காக ஒருஇடத்தில் எல்லா வித்வான்களும் சேர்ந்து சில காலம் இருந்து வாதங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. இதில் அஸௌகர்யம் அதிகம். விசேஷமாய் நமக்கு (ஆயுர்வைதிகர்களுக்கு) விருத்தியின் ஸ்வபாவத்தால் தன்னிருப்பிடமிருந்து வித்வத்ஸங்கத்திற்குப் போவது அதிகக் கஷ்டமான கார்யம் பத்திரிகைகள் மூலம் தத்வித்ய ஸம்பாஷணம் செய்வது ஸுலபம். அதிகக் காலச்சிலவு இல்லை. இருப்பிடத்திலிருந்து கொண்டே நமது விருத்தி கார்யத்திற்கு விரோதமில்லாமலே தத்வித்யஸம்பாஷணம் அதாவது சாஸ்திர சர்ச்சைகளை பத்திரிகை மூலம் நடத்துவது ஸௌகர்யமாயிருக்கிறது. இன்று இந்தக் கார்யத்தைச் செய்ய பெரிய உபகாரமாயிருப்பது நமது **வைத்திய சந்திரிகா**. வைத்திய சந்திரிகாவின் லக்ஷ்யங்கள் பல. அவைகளில் பிரதானமாயுள்ளவை:—ஆயுர்வேதப்பிரசாரமும் சாஸ்திரீய சர்ச்சையும்தான்.

இதில் வைத்திய வித்வான்கள் எல்லோரும் விசேஷ சிரத்தை பூர்ணமாய் எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு விஷயத்தில் தத்துவ ஞானம் வித்திக்க வேண்டுமாகில் பலருடைய அபிப்பிராயங்களையும் மதபேதங்களையும் அநுபவங்களையும் சாஸ்திரீய பரீக்ஷாவிதிப்படி ஆராய்ந்து அலசிப் பார்த்தால்தான் முடியும்.

ஒரு வித்வான் ஒரு புதிய விஷயத்தைப் பற்றி புதிய முறையில் நிபந்தம் எழுதினால் அதை எல்லா வித்வான்களும் கவனித்துப் படித்து அதில் உள்ள தோஷங்களை எடுத்துச் சொல்லவேண்டும். தோஷங்களை எடுத்துரைப்பதை நிபந்தகர்த்தாநல்லஹிருதயத்துடன் ஸ்வீகரிக்கவேண்டும். வாதப்ரதிவாதங்கள் செய்தால்தான் தத்துவம் வெளியாகும். ஸ்ரீசங்கராசார்யாள் சொல்லியபடி தத்விதிய ஸம்பாஷணத்தினால் அடையக்கூடிய பலன்கள் கிடைக்கும். ஜிஞ்ஞாஸா பரிஷத்தாக ஸம்பாஷணம் செய்யும் குணங்களை எல்லோருமே ஆச்ரயித்தால் இதனால் வரும் பிரயோஜனம் சொல்லிற் கடங்காது. அந்த ஆனந்தம் மிகப்பெரிது. உதாஹரணமாக எனது பரமஸ்நேகிதர் கரூர் பண்டிட் ஸ்ரீராமசர்மா அவர்கள் "பிளட் பிரஷர்" என்ற விஷயத்தை எழுதினார்கள். மிகவும் சாஸ்திரீயமான புதிய விஷயமிது. இவர்களிதை ஸமர்த்தனம் செய்திருப்பது முற்றிலும் சரியா என்று விமர்சம் செய்ய வேண்டியது மிகவும் அவசியம் என்று நான் சொல்லத் தேவையில்லை. விமர்சனமில்லாவிடில் அதில் ருசி கிடையாது. தத்துவம் வெளியாகாது. உந்மேஷத்திற்கு இடமேயில்லை.

ஆகலால் நமது வித்வத்ஸஹிருதயர்களை நான் விநயத்துடன் பிரார்த்தனை செய்து கொள்ளுவதாவது:—ஸ்ரீசங்கர பகவத் பாதாள் உபதேசித்தபடி ஜிஞ்ஞாஸாவுடன் ஸம்பூய ஸம்பாஷண பத்ததியோடு தாங்கள் நூதன நூதன விஷயங்களைச் சந்திரிகாவில் பிரகாசம் செய்வதோடு எழுதப்பட்ட நிபந்தங்களையும் விமர்சமும் செய்ய வேண்டும் என்று.

இவ்வழி ஒரு ஸமயம் புதிதாக விருக்கலாம். சிலருக்கு அவ்வளவு பிடித்தமில்லாமலிருக்கலாம். பிடித்தமில்லாமலாவதற்கு முக்கிய காரணம்—இம்மாதிரி விமர்சபத்ததி புதிதாயிருப்பதால் தான்.

விமர்சம் செய்வது வழக்கமாகி விடில் அது ஸஹஜமாகி விடும். வாதம் செய்வதில் வாதத்தை விட்டுவிட்டு வாதியுடன் வியவஹாரம் செய்வதால் தான் மாதுர்யம் அழிகின்றது. தாபம் ஏற்படுகிறது. வாதியைத்தொடாமலே வாதத்தை நடத்தினால் ரஸம் சுரக்கும்.

இதற்கு நான் முதலில் வழி காட்டுகிறேன். என்றால் எழுதப் படும் விஷயங்களை சரியான முறையில் விமர்சம் செய்ய வித்வான்களை வேண்டுகிறேன். என்னுடைய நிபந்தங்களில் இருக்கும் ஒவ்வொரு தோஷத்தையும் நன்றாக எடுத்துரைக்க வேண்டுகிறேன். ஸாதாரணமாய் எல்லோரும் சொல்லுவது போல் "எனது உபந்நியாஸத்தில் உள்ள தோஷங்களை விட்டு குணங்களை மட்டும் எடுத்துக்கொண்டு வித்வான்கள் என்னை அநுக்கிரஹம் செய்ய வேண்டும்" என்று நான் கோரவில்லை. நான் கோருவது "எனது உபந்நியாஸத்தில் இருக்கும் குணங்களை விட்டு தோஷங்களைப் பரிஹாரங்களுடன் எனக்கு எடுத்துக்காட்டி எனக்கு அநுக்கிரஹம் செய்யுங்கள்" என்றே. எனது தோஷங்களை எடுத்துக் காட்டாவிடில் எனக்கு தோஷபரிஹாரம் எவ்விதம் ஸித்திக்கும். என்னுடைய நிபந்தங்களையும் விமர்சனம் செய்ய வேண்டுகிறேன். பிறர் நிபந்தங்களையும் விமர்சனம் செய்ய வேண்டுகிறேன். என்றால் விமர்சனம் செய்யப் படுமாகில் அதை நான் மேற்சொன்னவாறு சர்ச்சா ஸ்வாரஸ்யத்திற்காகவே தவிர வேறில்லை என்று கருதும்படி நமஸ்கார பூர்வமாகப் பிரார்த்திக்கிறேன். சுபம்.

குறிப்பு:—இந்த வியாசத்திலுள்ள விஷயங்களை நாம் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். வியாஸங்களை விமர்சம் செய்வது வியாஸம் எழுதியவர்களை அவமதிப்பதாகாது. சாஸ்திராபிவிருத்திக்கு இது ஏற்றதுறையாகும். ஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களே இவ்விஷயத்தில் முதல் மார்க்கதர்சிகளாக ஆகவேண்டுமென்பது நமது கோரிக்கை. பத்திராதிபர்

திருச்சி ஆயுர்வேதாசார்ய

## ஸ்ரீ V. B. நடராஜசாஸ்திரிகள் எழுதியது

### உதும்பரம்—அத்தி—Fiscus Glomerata

**ஸாமான்யபரிசயம்**-அத்திமரத்தை எல்லோருமே நன்கு

அறிவர். வைத்தியர்கள் மட்டுமல்ல. அத்திமரம் யாகம் முதலிய வைதிக கர்மாக்களில் விசேஷமான உபயோகமுள்ளதானதால் யாவருமே நேரில் நன்கு பார்த்துள்ள ஸுப்பிரசித்தமான மஹா விருக்ஷமிது. இந்தியாவில் அத்திமரமானது ஸாதாரணமாக எல்லா பாகங்களிலும் தானாகவே முளைத்து வளருகிறது. இதைப்போத்து நட்டுப் பயிராக்குவதுமுண்டு.

**விசேஷபரிசயம்**—ஆயுர்வேதத்தில் பூர்வாசார்யர்கள் ஔத்பிதங்களை நான்குவிதமாகப் பிரித்துள்ளார்கள். அந்த விபாகத்தில் அத்தி 'வனஸ்பதி' விபாகத்தைச் சேரும். அத்திமரத்திற்கு பூ வில்லை. "அபுஷ்பா: பலவந்த: வநஸ்பதய:" என்று பரிபாஷை. அத்திமரத்திற்குப் புஷ்பம் உண்டா? இல்லையா? பரிபாஷைக்கு அர்த்தம் என்ன? என்பதை இங்கு ஆலோசனை செய்வது முக்கியமாகும். ஸாதாரணமாக மரங்களில் காய்கள் உண்டாகும் பிரகாரத்தை அநுஸரித்து மரங்களை இரண்டு விதமாகப் பிரித்திருக்கிறார்கள். முதலில் புஷ்பங்கள் உண்டாகி அதிலிருந்து காய்கள் காய்க்கின்றன. இவ்விதம் சில. மா, நாவல் முதலியன இவ்வகுப்பைச் சேர்ந்தவை. புஷ்பங்கள் இல்லாமலே சில காய்க்கின்றன. அவைகள்:—அத்தி, ஆல், அரசு, முதலியன. இதில் முந்தின வகுப்புக்கு 'விருக்ஷங்கள்' என்றும் பிந்தின வகுப்புக்கு 'வனஸ்பதிகள்' என்றும் பெயர். "அபுஷ்பா: பலவந்த: வநஸ்பதய:" "புஷ்பபலவந்த: விருக்ஷா:" என்று ஸுசுருதாசார்யர் செய்த பரிபாஷைக்கு ஸாதாரணமாய் அர்த்தம் செய்யவேண்டியிருக்கிறது.

புஷ்பமில்லாமல் காய் காய்ப்பதென்பது ஆகாச புஷ்பம்தான். புஷ்பமெல்லாம் காய்க்கவேண்டும் என்ற நியமமில்லை. ஆயினும் காய் புஷ்பமின்றி இல்லை என்பது சித்தம். அத்திமரத்திற்குக் காய்கள் இருப்பதால் அத்திக்குப் பூ வுண்டு. இதென்ன அத்தி பூத்தது என்று நினைக்கவேண்டாம். புஷ்பம் மரங்களுடைய ஜனனேந்திரியம் என்பது ஔத்பிதவித்யா ஸித்தாந்தம். ஸ்திரீகளுடைய கர்ப்பாசயம் போல பலோத்பாதனந்தான் புஷ்பங்களுடைய கார்யம். அத்திமரத்தில் புஷ்பங்கள் வெளியில் கண்களுக்குப் புலப்படவில்லை என்பதால் அத்திக்குப் பூ கிடையாது என்று சொல்வது சரியில்லை,

அத்திப்பிஞ்சை அறுத்து அதை நன்றாக வியவச்சேதம் செய்து கவனித்தால் அத்திப்பிஞ்சினுள் ஸூக்ஷ்மமான நூல் பசையுள்ள வஸ்து ஒன்று வெளிப்படும். அதின் ஒவ்வொரு நுனியில் அதி ஸூக்ஷ்மமான கடுகு போன்ற பீஜங்கள் ஒட்டி நிற்கும். இந்த ஒவ்வொரு பீஜத்தின் தந்துவும் நுண்ணிய புஷ்பங்களுடைய பரிணாமமேயாகும். புஷ்பமென்பது என்ன? எந்த ஒரு ஸ்தான விசேஷத்தில் மரங்களுடைய "பும்கேஸரங்களும்" ஸ்திரீகேஸரங் களும்" ஸம்யோகமாகி பலத்தை உண்டுபண்ண (பலமாக பரிணமிக்க) கர்ப்பாசயம் போல் கர்ப்பகேஸரங்கள் உள்ளனவோ அதுதான் புஷ்பம். புஷ்பதளங்களுடைய மத்ய குழைக்கு பும்கேஸர—ஸ்திரீ கேஸர ஸம்யோகஸ்தலத்திற்கு "புஷ்பதி" என்னும் பரிபாஷை செய்யப்பட்டிருக்கிறது. அத்தியில் இக்காரியம் வெளிப்படை யாகத் தெரியவில்லையே தவிர புஷ்பகார்யமில்லாமல் அத்தியில் காய்கள் உண்டாகவில்லை. மா, நாவல் முதலிய விருக்ஷங்களில் போல அத்தி, அரசு, ஆல் முதலிய விருக்ஷங்களில் புஷ்பங்கள் பிரகாசமாகக் கிடையாதென்பதே விசேஷம். அத்தியிலும் ஸூக்ஷ்ம தர்சனியின் ஸஹாயத்தால் புஷ்பங்களுடைய இருப்பைப் பார்க்க முடியும்.

ஆதலால் முற்கூறிய பரிபாஷைக்கு அர்த்தமிவ்வாறு கொள்ள வேண்டும்:—சில மரங்களில் புஷ்பங்கள் வியக்தமாக உள. சில வற்றில் புஷ்பங்கள் வியக்தமாக இல்லை. கார்யத்தால் அநுமானம் செய்ய வேண்டியவைகளாயும் பூதக்கண்ணாடி உதவியினாலும் தான் புஷ்பங்களுடைய இருப்பை அறியவேண்டியிருக்கிறது. பிரகாசமாக புஷ்பங்களேற்பட்டு காய்க்கின்றவைகள் விருக்ஷங்கள் என்றும் அவ் விதமின்றி புஷ்பப்பிரகாச மேற்படாமல் காய்ப்பவைகள் வனஸ் பதிகள் என்றும் பெயரிடப்பெறுகின்றன. ஆகவே அபுஷ்பா: என்றால் அவ்யக்த புஷ்பங்களுடையவை குப்த புஷ்பங்களுடையவை என்று அர்த்தம். புஷ்பங்களிலிருந்து தான் காய்கள், புஷ்பங் களில்லாமல் காய்கள் இல்லை என்ற விசேஷ ஞானம் பூர்வாசார்யர் களுக்கு இல்லை யென்று [illegible] இடமேயில்லை. இந்த ஞானம் முன்னோர்களுக்கு [illegible]

"புஷ்பபலவந்த: அபுஷ்பபலவந்த:" என்ற சப்தங்களுடைய ஸ்வாரஸ்யமே அத்தாக்ஷி. 'அ' காரத்திற்கு அல்பமென்றும் சூன்யமென்றும் அர்த்தம் ஸம்ஸ்கிருதபாஷையில் பிரஸித்தம். நடுவில் வந்த விஷயத்தின் அதிவிஸ்தாரம் போதும். இதில் இத்துடன் நிற்போம்.—

அத்திமரம் பஞ்சவிதக்ஷீரி விருக்ஷங்களில் ஒன்றாகும்.

ந்யக்ரோத உதும்பர அச்வத்த ப்லக்ஷ பாரீஷ பாதபா: | பஞ்ச ஏதே க்ஷீரிணோ விருக்ஷா: என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அத்தியின் பேதங்களும் விசேஷ பரிசயமும்—சிகித்ஸைக்குப் பிரயோஜனமுள்ளதாக நமது தேசத்தில் இரண்டு வித அத்திமரங்கள் பிரஸித்தமாயுள்ளன. ஒன்று அத்தி. மற்றது பேயத்தி. ராஜநிகண்டுக்காரர் நீரத்தி என்று மூன்றாவது அத்தி பேதம் சொல்லியுள்ளார். நீரத்தியின் பிரயோகம் சிகித்ஸையில் எங்கும் காணவில்லை. போகர் நிகண்டுவிலும் அத்தி பேயத்தி என இருவித அத்திகள்தான் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த இரு வகைகளுள் அத்திமரம் ஆகாசத்தை யளாவி வளருகிறது. இதன் இலைகள் வழவழப்பாய் மிருதுவான ஸ்பர்சமுள்ளவை. நன்றாக முற்றிய இலைகளில் சிறிய முடிச்சுகள் உண்டாகின்றன. இம்முடிச்சுகளினுள் சூன்யமான பிரதேசம்தான். பேயத்தி மிகச்சிறிய விருக்ஷம். ஓங்கி வளருகிறதில்லை. இதன் இலைகள் அத்தியிலைகளைப் பார்க்கிலும் பெரியவை. சுரசுரப்பானவை. ஆதலால் இதன் பெயர்களில் "கரபத்ரீ" என்பதும் ஒன்றாம். ஸாதாரண அத்தியின் காய்களைப் பார்க்கிலும் பேயத்தியின் காய்களோ சிறியவை. பேயத்தியின் காய்களை வங்காள தேசத்தினர் ஆஹாரசாகமாக உபயோகிக்கின்றனர். தமிழ் தேசத்தில் பேயத்திக் காயைப் புசிப்பதில்லை. ஸாதாரண அத்தியின் பிஞ்சுக்காய்களை தமிழ் தேசத்தில் சாப்பிடுவதுண்டு. வட இந்தியாவில் யுக்தப்பிராந்தத்தில் (காசிப்பக்கம்) அத்திப்பிஞ்சை ஆதரவாய் உண்கின்றனர். ஸாதா அத்தியின் பழங்கள் சிவப்பு வர்ணமாயும் கிருமிகள் உள்ளதாயும் இருக்கும். இதனால் அதற்கு "ஜந்து பலீ" என்று ஒரு பெயர் ஏற்பட்டது.

சீமை அத்திப்பழம்—பழங்களை அதிகமாய் சாப்பிடவேண்டும் என்று இப்போது பிரசாரம் அதிகமான பிறகு சீமை அத்திப்பழம் என்று டப்பிகளில் அடைத்துக்கடைகளில் விற்கப்படுகின்றது. இந்தப்பழமும் ஒருவித அத்தியின் பழமே. இதற்கு அஞ்ஜீர விருக்ஷம் என்று ஸம்ஸ்கிருதப்பெயர். இது ஆப்கானிஸ்தான் தேசங்களில் ஸ்வயமாகவே ஏராளமாய் உத்பத்தியாகின்றன. அஞ்ஜீரவிருக்ஷம் அதன் பழத்திற்காக வட இந்தியாவில் மலைப்பிரதேசங்களில் பயிர் செய்யப்படுகின்றது. இதன் பச்சைப் பழங்கள் காஷ்மீரத்திலும் மற்றும் வடநாட்டிலும் சாதாரணமாய் பழவர்க்கக் கடைகளில் ஏராளம் விற்கப்படுகின்றன. இவைகளில் புழு ஏற்படுகிறதில்லை. இப்பழங்களை உலர்த்தி கெடாமல் பதம்செய்து வியாபாரம் செய்கின்றனர். இது புஷ்டிகரமான மதுரமான பழம். யூனானி சிகித்ஸா முறையில் இந்த அத்திப்பழ ஸர்பத்து ஒரு முக்கியமான பானகமாகும். லேஹியங்களிலும் சேர்க்கின்றனர். பழைய ஆயுர்வேத ஸம்ஹிதா கிரந்தங்களில் இந்த அத்திபேதமானது இருப்பதாகத் தெரியவில்லை.

இக்கட்டுரையில் அத்தியைப்பற்றி மட்டும் விஸ்தாரம் செய்யப்போகிறோம். மற்றவைகளைத் தனியாக எழுத உத்தேசித்துள்ளோம். அத்திக்குள்ள பர்யாய சப்தங்களுள் க்ஷீரவிருக்ஷ: ஜந்துபல; ஸதாபல:, புஷ்பசூன்ய:, ஸிதவல்கல:. என்ற ஐந்து பெயர்களும் அத்தியின் ஸ்வரூபத்தை அழகாய், வியக்தமாய் காட்டுகின்றன. அத்திக்கு யக்யாங்க: என்று மற்றொரு பெயர். இதனால் யாஞ்கிக விருக்ஷங்களில் அத்தி மிகவும் பிரதானமானது என்று தோன்றுகிறது. இல்லையாகில் புரசு, அரசு, கருங்காலி, வில்வம் முதலியவும் யாஞ்கிகங்கள்தான். ஆயினும் அத்திக்கு மட்டும் யக்யாங்க: என்று பெயர் ரூடியாக ஆவதற்குக் காரணம் யாது? இன்றும் வட இந்தியாவில் ஹிந்தியில் இதற்கு 'ஜனுமர்' என்றுதான் வியவஹாரம் வழங்குகிறது. இந்த சிறு நிபந்தத்தில் உதும்பர வனஸ்பதியினுடைய ஆவிஷ்கிருத தமமான குணங்களையும், பிரயோகங்களையும் எமது ஆசார்யரின் உபதேசம், அனுபவம், இவைகளையொட்டி அறிந்தபடி எழுதுகிறோம்.

அத்தி யுக்தி விபாச்ரயம், தைவவியபாச்ரயம் எனப்படும் இருவித சிகித்ஸாவிதிகளிலும் மிகவும் உபயோகமுள்ளதாகிறது ச்ரௌதகர்ம, ஸ்மார்த்தகர்ம, நித்யகர்ம, நைமித்திககர்ம, ஸகாமகர்ம நிஷ்காமகர்ம, மாந்திரிககர்ம, தாந்திரிககர்ம, முதலிய எல்லாவற்றிலும் பற்பல ஸ்தானங்களில், நான்கு வேதங்களிலும், மந்த்ர சாஸ்திர தந்திர சாஸ்திரங்களிலும் உதும்பர பிரயோகம் வெகுவாக உபயோகிக்கப்பட்டிருக்கிறது. முக்கியமாக அதர்வ வேதத்தில், (எதனுடைய உபவேதமோ நமது ஆயுர்வேதம்: எதில் ஐஹிக புருஷார்த்தங்களின் ஸாதனோபாயங்கள் அதிகமாக உபதேசிக்கப்படுகின்றதோ அந்த அதர்வவேதத்தில்) ஔதும் பரப்பிரயோகம் அதிகமாயிருக்கிறது. உதாஹரணமாக—அதன் ஸம்ஹிதா 21வது கண்டம் 4-வது அநுவாகம், 5-வது ஸூக்தத்தில் உள்ள 14 ரிக்குகளும் பசு—புத்ர—தன—தான்ய சரீரங்களுடைய விசேஷ போஷணத்தை அடைய விரும்புகிறவனுக்கு விநியோகங்களாக உபதேசிக்கப் பட்டுள்ளன. அவைகளில் முக்கியமானது ஔதும்பரபிரயோகம் தான். ருக்—யஜுஸ்—ஸாம வேதங்களிலும் ஔதும்பரஸமித்தினால் ஹோமமும் யூபஸ்தம்பாதி அநேகப் பிரயோகங்களும் உபதேசிக்கப் பட்டிருக்கின்றன. இது மட்டுமல்ல. உதும்பரத்தினால் ஒரு மணி செய்து அதன் விதிபூர்வமான தாரணத்தினால் பெரிய மஹத்துவ விபவம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஔதும்பரேண மணிநாபுஷ்டிம் காமாய வேதஸா | பசூநாம் ஸர்வேஷாம் ஸ்பீதிம் கோஷ்டம் மே ஸவிதாகரத் ||

என்று ஆரம்பித்து ஔதும்பரமணி, தாரண பிரயோகங்கள் உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் அநேக உதும்பரப்பிரயோகங்களை எடுத்துரைக்க அவகாசமில்லை.

இதிலிருந்து நாம் ஆலோசனம் செய்யவேண்டியதென்ன? தைவ வியபாச்ரயப் பிரயோகங்களுக்கு அந்தந்த மந்திரசக்தியினால் தான் சக்தி ஏற்படுகின்றது என்பது நிச்சயம். ஆயினும் ஒவ்வொரு பிரயோகத்தில் ஒவ்வொரு மந்திரத்திற்கு ஒவ்வொரு ஓஷதி விசேஷத்தையும் வேதமும் அதையறிந்த மஹர்ஷிகளும் பிரத்யேகமாய் உபதேசிக்கின்றனர். இவ்வித உபதேசத்தால் ஓஷதிகளுக்கு

அதிருஷ்ட பிரயோஜனமுள்ள கார்யங்களிலும் அலௌகிகமான பிரபாவம் இருப்பதாக அவசியம் அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. ஆயுர்வேதோபதேசத்தில் எவ்விதம் ஓஷதிகளுக்கு சரீராப்பியந்திர பிரயோகத்தில் விசிஷ்ட பிரபாவமானது சொல்லப்பட்டிருக்கிறதோ அவ்விதமே மந்திரப்பிரயோககர்மாவிலும் மந்திரங்களை அநுசரித்து ஓஷதிக்குப் பிரபாவம் இருக்கவே இருக்கிறது. இல்லையாகில் ரிஷிகள் வேதங்கள் எல்லாம் மந்திரத்தை மாத்திரம் உச்சாரணம் செய்து கார்யத்தை ஸாதித்துக்கொள்ளலாம். யதிருச்சையாக எந்த மந்திரத்தையாவது ஜபித்துஎந்த வேரையாவது எடுத்துக் கட்டச் செய்யலாம். இவ்விதம் இல்லை. ஆனால் இந்த மந்திரத்தை ஜபித்து இந்தஓஷதியை (அத்தி, மஞ்சள், எருக்கு, புரசு என்று பலவாறாக) எடுத்து ஹோமம் செய் என்றுதான் உபதேசம். தனி மந்திரத்திற்கு கார்யஸாதக சக்தி தனிமையில் பூர்ணமாகக் கிடையாது. விசிஷ்ட ஓஷதிஸம்பந்தத்தினால்தான் அந்த சக்தி அதற்கு ஏற்படுகின்றது என்று ஓஷதிகளுக்குள்ள சரீராசரீரங்களில் திருஷ்டாதிருஷ்ட பிரபாவங்கள் அத்யாச்சரியமானவை. இவ்வாறு அத்திக்கு தைவ வியபாச்ரயமான அதிருஷ்ட பல கர்மாக்களில் உள்ள பிரயோகங்களின் சுருக்கம் மட்டும் சொல்லப்பட்டது. இனி யுக்தி வியபாச்ரய சிகித்ஸையின் விஸ்தாரம் அடுத்த ஸஞ்சிகையில் வெளிவரும்.

குறிப்பு:—கல்லத்தி என்ற ஓர் அத்திபேதம் அகஸ்தியர் நூல்களில் காணப்படுகின்றது ஆனால் அது துர்லபமெனக் கருதப் படுகின்றது.

பத்திராதிபர்.

---

## வாநஸ்பத்தியமும் வநஸ்பதியும்

## (பத்திராதிபர்)

வடமொழியில் "வாநஸ்பத்யம்" "வநஸ்பதி" என்னும் இரு சொற்கள் காணப்படுகின்றன. இவற்றிற்குப் பொருள் கூறும் பொழுது அமரத்தில் "வாநஸ்பத்ய: பலை: புஷ்பாத் தைரபுஷ்பாத் வநஸ்பதி:" என்று வசனம் காணப்படுகின்றது. புஷ்ப பலமுள்ளவைகள் வாநஸ்பத்யமென்றும்; புஷ்பமில்லாமல், பலம் உள்ளவை வநஸ்பதியென்றும் பொதுவாக இவ்வசனத்திற்குப் பொருள்

கொள்ளலாம். புஷ்பமில்லாமல் பலம் உண்டாகுமோ என்று ஓர் கேள்வி உதிக்கின்றது. ஆதுனிக வநதத்துவ கியானிகள் கூறுவதாவது—"புஷ்பமின்றி காய் உண்டாவதில்லை. மா முதலிய மரங்களில் புஷ்பங்கள் கொத்து கொத்தாகக் காணப்படுகின்றன. அப்புஷ்பங்கள் (ஒரே கொத்தில்) சில ஸ்திரீயினமாகவும் சில புருஷ இனமாகவும் இருக்கின்றன. அப்புஷ்பங்கள் காற்று முதலியவைகளால் அசையும்பொழுது ஸ்திரீ புருஷ புஷ்பங்களிலுள்ள ரஜஸ்ஸுக்கள் ஒன்று சேருவதால் அது சில ஸஹகாரி காரணங்களையும் கொண்டு கிரமமாக காய்களாக பரிணமிக்கின்றன வென்று சொல்லுகின்றனர். இந்த தத்வத்தை எல்லோரும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். ஏனெனில் இத்தத்துவம் ஆங்கில பாஷையில் காணப்படுகின்றது. ஆகவே "அபுஷ்பா: பலவந்த: வநஸ்பதய:" என்ற சான்றோர் வசனத்தை சற்று மாற்றவேண்டும், மாற்றுவதற்கும் அதில் இடமிருக்கிறது. 'அபுஷ்பா:' என்ற இடத்தில் 'அ' என்ற எழுத்து அல்பம் அல்லது சிறியது என்று பொருள் கொடுக்கக்கூடியது. ஆகவே சுசுருதர் வசனமும் ஸங்கதமாகிறது என்று திருச்சி ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ **V. B. நடராஜசாஸ்திரிகள் அவர்கள்** எழுதிய கட்டுரையின் முக்கிய கருத்து. அவர்கள் எடுத்துக்கொண்ட விஷயத்தை ஸாதிப்பதற்காக "புஷ்பமில்லாமல் பலம் இல்லை" என்று ஓர் வியாப்தியையும் கல்பித்துக் கொண்டார்கள். இந்த வியாப்தி எப்படி கிருஹீதமாயிற்று என்பதை அவர்கள் நிரூபிக்கவில்லை. அத்திக்கு புஷ்பங்கள் உண்டு. பலம் இருப்பதால், எங்கெங்கு பலம் இருக்கிறதோ அங்கங்கு புஷ்பம் உண்டு. மாமரம் போல என்றல்லவோ அநுமானப்பிரகாரம் இருக்க வேண்டும். இதை ஸதநுமானமாகக் கொள்ள வழியில்லை. சாஸ்திர ஸம்வலித ப்ரத்யக்ஷப்ரமாணத்தால் அத்திக்குப் புஷ்பங்களில்லை என்பது ஸித்தம். வ்யாப்ய வியாபகங்களும் வ்யத்யஸ்தம். இந்த வியாப்தி அத்தி புஷ்பங்களால் ஸித்திக்க வேண்டும். அத்திபுஷ்பம் இந்த வியாப்தியால் ஸித்திக்கவேண்டும். ஆகவே அந்யோந்யாச்ரய தோஷமும் வருகிறது. மேலும் "அபுஷ்பா:" என்ற இடத்தில் 'அ' நஞ் ஸ்தானத்தில் வந்திருந்தால் அப்பொழுது அதற்கு அர்த்தம் மூன்று விதமாகச் செய்யலாம். அதன: என்றால் தனசூன்யன் என்பதுபோல புஷ்பசூன்யம் என்று முதல் பொருள்.

அநாரோக்கியம் அமேத்யம் என்ற இடங்களில் போல ஆரோக்ய விருத்தம் மூளைக்கு விருத்தம் என்பது இரண்டாவது பொருள். அப்ராஹ்மண: என்ற இடத்தில் போல பிராம்மண பின்னன் என்பது மூன்றாவதுபொருள். இதைத்தவிர "அ" என்பது ஓர்தனி அவ்வியயமாக அங்கீகரித்தால் அல்பம் என்ற பொருள் கிடைக்கும். அஸுகம் என்ற இடத்தில் அல்பஸுகம் என்பதுபொருள். சாஸ்திரிகள் அவர்கள் "அ" என்பதை ஓர் அவ்யயமாக பரிக்ரஹித்தார்கள் என்றே சொல்லவேண்டும். அதற்கு அல்பம் என்ற பொருள் கிடைத்தாலும் அவர்கள் நினைப்பதுபோல அவ்யக்தம் என அர்த்தம் கிடைக்காது. அல்பம் என்ற சொல் அவ்யக்தம் என்ற பொருளைக் கொடுக்க சக்தியற்றது. தவிர "புஷ்ப விகஸநே" என்ற தாத்வர்த்தத்திற்கு விருத்தமாக புஷ்பசப்தத்திற்கு அர்த்தம்கொள்ளுவதும் அனுசிதம். ஆகையால் சாஸ்திரிகள் அவர்கள் காட்டிய பிரக்கிரியை பொருந்தாதென்று தோன்றுகிறது. தவிர பலா மரத்தை யாவரும் அறிவார்கள். அம்மரத்திற்கு ஓர் விசேஷ குணம் உண்டு. அதாவது பூமிக்குள்ளிருக்கும் அதன் வேர்களில் காய்கள் உண்டாகி அது பருத்தவுடன் பூமிவெடித்து அதன் இருப்பிடம் புலப்படும். பூமியை வெட்டி பழத்தை எடுப்பது மிகவும் ஸஹஜம். இந்த இடத்திலும் புஷ்பவத்வம் அனுமானத்தால் சாதிப்பதென்பது முடியாது. பதங்களுக்கு அர்த்தபோதனத்தில் உள்ள சக்தியை நிகண்டு முதலியவைகளால் தெரிந்து கொள்ள வேண்டும். தலைப்பில் நாம் காட்டிய அமரவசனத்தால் புஷ்பாத் பலை: வாநஸ்பத்ய:, அபுஷ்பாத் பலை: வநஸ்பதி: என்றுமுடிவதால் "புஷ்பாத் அபுஷ்பாத்" என்ற பஞ்சமிகளுக்கு அர்த்தத்தை கவனித்தால் பலத்திற்குப் புஷ்பம் காரணமாவது போல அபுஷ்பமும் காரணமாவதாகப் புலப்படுவதால் அபுஷ்பம் என்பது அபாவ பதார்த்தமாக ஆகமாட்டாது. ஆதலால் அதை பாவ பதார்த்தமாகவே கொள்ளவேண்டும். அப்பொழுது புஷ்பபின்னம் என்ற பொருள்தான் ஸ்வாரஸ்யமாகக்கிடைக்கின்றது. புஷ்பங்கள் காரணமான பலங்களையுடையது வாநஸ்பத்யம், புஷ்ப பின்னங்களான காரணங்களால் பலங்களையுடையது வநஸ்பதி என்று விதிக்கின்றது. வைத்தியர்கள் அல்லாத பண்டிதர்களும் இவ்விஷ

யத்தில் சர்ச்சை மூலமாகத் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட வேண்டுகிறேன்.

பத்திராதிபர்.

---

## வசம்பு

வசம்பு பல மருந்துகளில் சேருகின்றது. மாயவரத்திலிருக்கும் நமது ஹக்கீம் நண்பர் ஒருவர் அடியில் காணுமாறு எழுதுகின்றார்—"வசம்பைப் பல முறைகளில் சுட்டுகருக்கிச் சேர்க்க வேண்டுமென்று புலப்படுவதால் எல்லா முறைகளிலும் அதைச் சுட்டே சேர்க்கவேண்டுமா? அல்லதுபச்சையாகச்சேர்க்கவேண்டுமா? நாம் காணும் சில சீனதேச மருந்துகளில் வசம்பின் பச்சை வாடையடிப்பதால் அதைச் சுடாமலே சேர்த்து வருவதாகவும் புலப்படுகின்றது. ஆகவே நாம் எவ்விதம் செய்வது உசிதம் என்பது ஹக்கீம் அவர்களின் கடிதச்சுருக்கம்.

வசம்பை பச்சையாக மருந்துகளில் சேர்ப்பதுதான் உசிதம், நாமும் அவ்விதமே அனுபவத்தில் செய்துவருகிறோம். குணம் நன்றாகவிருக்கின்றது. பச்சை வசம்பைப் பொடி செய்து ரஸ சிந்தூரத்துடன் சேர்த்து அபஸ்மார நோய்களில் கொடுத்து நல்ல குணம் கண்டிருக்கிறோம். ஆனால் தமிழ் நூல்களில் சில இடங்களில் அதைச்சுட்டு சேர்க்கும்படி காணப்படுகின்றது. அந்தவிடங்களில் மாத்திரம் அதைச்சுட்டு சேர்க்கவேண்டும். மற்ற இடங்களில் பச்சையாகத்தான் சேர்க்கவேண்டும். பத்திராதிபர்.

# க்ஷயாந்தக ரஸம்.

க்ஷய நோய்களுக்கு (Pulmonary Tuberculosis) ஓர் ஒப்பு வற்ற மருந்தெனச் சுதேச நூல்களில் கூறப்பட்ட தாளக பஸ்மம், வைக்ராந்த பஸ்மம், ஸ்வர்ணமாக்ஷிக சிந்தூரம், ஆகிய இம்மூன்றும் அளவுப்படி சேர்க்கப்பட்டு க்ஷயாந்தக ரஸமென்ற பெயருடன் வெகு காலமாக அனுபவத்தில் பரிசீலிக்கப்பட்ட இம்மருந்து க்ஷய நோய்களில் மிக்க குணம் கொடுக்கக் கூடியது. சுமார் 15 நாட்களுள் காய்ச்சல் முதலியவைகளைக் குறைத்துச் சில மாதங்களுக்குள் பூர்ண சுகத்தை அளிக்கின்றது. 4 அல்லது 5 மாதங்களுக்குள் க்ஷய நோய் பூர்ணமாக நிவர்த்தியாகும். இத்துடன் சுவர்ண பஸ்மம் சேர்த்துச் சாப்பிடுவதும் நாகபலா லேகியத்தை அனுபானமாகக் கொள்வதும் மிகவும் நல்லது.

| | | |
|---|---|---|
| க்ஷயாந்தக ரஸம் | ஒரு மாத மருந்து விலை ரூ. | 10. |
| ஷை ஸ்வர்ண சிந்தூரத்துடன் | ஷை ஷை விலை ரூ. | 20. |
| நாகபலா லேகியம் | ஷை ஷை விலை ரூ. | 5. |

தபால் செலவு வேறு.

மருந்தைக் காலை 6-மணி, சாயங்காலம் 6-மணி ஆக இரண்டு வேளைகளில் தேனில் குழைத்துச் சாப்பிட வேண்டும். அரிசி, கோதுமை, பருப்பு, தயிர், பால், நெய், வெண்ணை, பாதாம்பருப்பு, சாரப்பருப்பு, ஆரஞ்சு, கொடிமுந்திரிப் பழம், ஜீர்ணமாகக் கூடிய காய்கறிகள் முதலியன புஷ்டியாகச்சேர்த்துக் கொள்ளவும். சற்று காய்ச்சல் இருந்தாலும் ஸ்நானம் கூடாது. காய்ச்சல் நின்ற பிறகு தலை ஸ்நானம் செய்யலாம்.

விலாசம்:—

பண்டிட் நாராயண அய்யங்கார்,

2, நீர் போலீஸ் ஸ்டேஷன் மேல்புரம் சந்து, மதுரை.

Registered No. M. 4018

We stand
Unrivalled today in the whole
Medical world to supply the highest
Standard of our Ayurvedic Tinctures
Work starts on a large commercial
scale presently
Look for
Our shastraic preparations,
Specialties & simple tinctures
Including
The unrivalled **Tincture Saptaparni**
The greatest malarial specific
More effective than quinine without any
Of the latter's ill effects.
It will shortly replace quinine every
where.
Ayurvedic Physicians
Will prescribe
Ayurvedic tinctures in future in
The same way as doctors do, (B.P. Tinctures)
Ayurvedic tinctures are standard
In Indian Empire as
B. P. Tinctures are in British Empire.
Influential persons with good financial backing wanted as Chief Stockists and Distributors for Madura, Tinnevelly, Trichinopolly, and Tanjore Districts.
**Ayurvedic Compound Tinctures Ltd.**
**TRIVANDRUM.**

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |